Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 18 (10.02.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:131

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

# நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தமை சமாதான முயற்சிக்குப் பெரும் பின்னடைவு!



## அன்ரன் பாலசிங்கம் கருத்து

(லண்டன்)

**நாடாளுமன்றத்தைக் கலைத்து - மீண்டும்ஒரு பொதுத்தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த முடிவானது சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் ஐ.பி.சி. வானொலிச் சேவைக்கு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -**

இலங்கைத்தீவை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்கும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மனப்பக்குவமும், தொடர்ச்சியான பங்களிப்பும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லை.

மீண்டும், மீண்டும் சிங்கள மக்களிடம் ஆணைபெற எடுக்கப்படும் முயற்சிகள் இந்த அரசியல் வெறுமையையும், ஆற்றாமையையும் எடுத்துக் காட்டுகிறது.

சிங்கள ஆளும் வர்க்கம் மத்தியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மருதானையில் சுற்றித்திரிந்த 4 யாழ். இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

கொழும்பு - மருதானைப் பகுதியில் வாகனம் ஒன்றில் சுற்றித் திரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் விசாரணைகளுக்காக, கொட்டாஞ்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான நான்கு இளைஞர்களும் அப் பகுதியில் சுற்றித் திரிந்தமைக்கான கார

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு — பிரதிநிதிகளை நியமிக்க; உயர்நீதிமன்றில் மனு!

(கொழும்பு)

சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு உத்தரவிடுமாறுகோரும் விசேட மேன்முறையீட்டு மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மக்கள் நலன்புரி சட்ட மன்றம் தாக்கல் செய்த இந்த மனுவில் ஜனாதிபதி, சட்டமா அதிபர் உட்பட 18 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பிரதிநிதிகளை நியமிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழு தலைவர் திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்று திருகோணமலைக்குச் சென்று பல்வேறு தரப்பினருடனும கலந்துரையாடல்களை நடத்தினார்.

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு திருகோணமலைக்கு சென்ற அவர் முதலில் திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்குச் சென்று மாவட்ட கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹேறட்ஸ்பர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குறுந்தூர ஏவுகணை; புலிகள் பரீட்சிப்பாம்!

### சிங்கள இணையத்தளம் கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அண்மையில் குறுந்தூர ஏவுகணை ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்ததாக சிங்கள இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

இந்த இணையத்தளச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது -

கடந்த மாதம் 3 ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள தளம் ஒன்றிலிருந்து புலிகள் குறுந்தூர ஏவுகணை ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்தனர். இந்த ஏவுகணை நெடுங்கேணிப் பகுதியிலுள்ள 'கென்ட் பாம்' என்ற இடத்தில் வெடித்துச் சிதறியது.

25 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அழிவை ஏற்படுத்தக்கூடிய இந்த ஏவுகணை, ஏவப்பட்ட தளத்திலிருந்து சுமார் 40 மைல் தூரம் பயணஞ்செய்து குறிப்பிட்ட இலக்கைத் தாக்கியது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு வவுனியாவில் பொலிஸ் பாதுகாப்பு!

(வவுனியா)

வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் மீது இனந்தெரியாதோரால், நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சையடுத்து, அந்த அலுவலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வவுனியாவில் நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது. இதற்குப் பார்வையாளர்களை உள்ளே அனுமதிப்பதில் பிரச்சினைகள் எழுந்தன.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் - கண்காணிப்புக்குழு அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சுச் சம்பவத்தில், அலுவலகக் கண்ணாடிகள் தேசமடைந்தன.

இந்தச் சம்பவத்தினையடுத்து கண்காணிப்புக்குழுவினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்தே நேற்றுமுன்தினம் இரவு முதல் அலுவலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## ஐ.தே.முன்னணி அமைச்சர்களின் அதிகாரம், எண்ணிக்கை குறைக்கப்படும்!

### ஜனாதிபதி விரைவில் நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களிடம் உள்ள அதிகாரங்களையும், அமைச்சர்களின் எண்ணிக்கையையும், நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பதாக குறைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களை ஆதாரம் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

பல்வேறு அரசியல் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறைப்பாடு செய்ததன் அடிப்படையிலேயே அவர் இந்த நடவடிக்கையை எடுக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

இப்போது அமைச்சர்களாக இருப்பவர்கள் அடுத்துவரும் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்பதால், அவர்கள் தமது அதிகாரங்கள், அலுவலர்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்களை தேர்தலுக்குப் பயன்படுத்துவர்கள் என்று ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து அமைச்சருடன் தமிழ்ச்செல்வன் குழு சந்திப்பு!

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நெதர்லாந்து அரசின் வெளிவவகார அமைச்சு இராஜதந்திரிகளை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார்.

நெதர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த கரிபான் திக்கை சந்தித்தே இக்கலந்துரையாடலை நடத்தினார்

இச்சந்திப்பின் பொது போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான தேவைகள் குறித்தும், இவற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் எஸ்.பி, ரவி; விரைவில் பதவி நீக்கம்!

(கொழும்பு)

இரண்டு அமைச்சர்களை காபந்து அமைச்சரவையிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா மிகவிரைவில் நீக்கவிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மற்றும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரே காபந்து அரசிலிருந்து நீக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு அமைச்சர்களும் முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்ததுடன் - ஜனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாணசபை நேற்று கலைப்பு!

(கொழும்பு)

வடமேல் மாகாணசபையின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. இதனால் வடமேல் மாகாணசபைக்கான தேர்தல் அறிவிப்பும், நியமனப்பத்திரம் கோரலும் அடுத்த ஒரு வார காலத்தினுள் வெளியிடப்படும் என்று அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவித்தன.

தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் எட்டுமுதல் பதினைந்து நாட்களுக்குள் கோரப்படவிருப்பதுடன், நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்.

இந்தச் சட்டப்படி மாகாணசபைக்கான தேர்தல் ஐந்து முதல் எட்டு வாரங்களுக்குள் நடத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail s-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# எமது கோரிக்கையை ஏற்போருடன் கூட்டணி அமைக்கத் தயார்!

## ஆறுமுகன் தொண்டமான்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள மூன்று அடிப்படைத் தேவைகள் அடங்கிய கோரிக்கைகளை பூர்த்தி செய்வோருடனேயே, எதிர்வரும் தேர்தல் கூட்டுத் தொடர்பாக, பேச்சுவார்த்தை நடத்தப்படுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகமான சௌமிய பவனில் நேற்றுமுன்தினம் 5.30 மணிக்கு இடம்பெற்ற நிர்வாக சபைக கூட்டத்திலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக காங்கிரஸ் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - மலையக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு சேவையாற்றிவருறோம். மக்களின் அடிப்படைத் தேவைகளை எதிர்காலத்திலும் நிறைவேற்ற வேண்டியது எமது கடமை. எமது கடமையிலிருந்து நாம் ஒருபோதும் விலக மாட்டோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்தக்கட்சியுடன் சேர்ந்து தேர்தலுக்கு முகம்கொடுக்கப்போகின்றது என்ற வினா எழுப்பிக்கொண்டிருக்கும் இந்தவேளையில், நாம் முன்வைக்கும் மூன்று அடிப்படைத் தேவைகள் அடங்கிய கோரிக்கைகளை பூர்த்திசெய்வோருடனேயே, எதிர்வரும் தேர்தல் கூட்டுத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவோம்.

எமது சமூகத்தின் கல்வி அபிவிருத்தி, வீட்டுப்பிரச்சினையை தீர்த்தல், இன விகிதாசார முறைப்படி அரசாங்க வேலைவாய்ப்பு ஆகிய இம்மூன்று கோரிக்கைகளும் எதிர்காலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். எமது மூன்று அடிப்படைத் தேவைகள் அடங்கிய கோரிக்கைகளை பூர்த்திசெய்வோருடனேயே, எதிர்வரும் தேர்தலில் கூட்டுத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவோம். என்றும் ஆறுமுகன் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

# ஜி.ஜியின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு!

தமிழ் தேசிய காங்கிரஸ் கட்சியினரால் நேற்று ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 27 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தமிழ்காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி, மற்றும் கட்சியின் உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் குருநகர் பகுதியிலுள்ள ஜி.ஜி. பொன்னம்பலத்தின் உருவச்சிலைக்கு மலர்மாலையும் அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் குருநகர் பகுதி மக்களும் கலந்துகொண்டனர். ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நினைவாக நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் கட்சியின் பல முக்கியஸ்தர்கள் உரைகளை நிகழ்த்தியதுடன் அவரது அரசியல் வாழ்க்கை மற்றும் அரசியல் அனுபவங்கள் பற்றியும் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை

# வடமராட்சி கல்விவலய பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம்

**புற்றளை மகாவித்தியாலயம்**

தோற்றியோர் - 60, சித்தியடைந்தோர் - 14, எஸ்.சுகன்யா - 135, எஸ்.கபிலன் - 153, வி.கீர்த்தனன்- 126, ஜி.துசாந் - 119, எஸ்.மதுரா - 127, பி.மைதிலி - 128, எஸ்.சாரங்கா- 121, எஸ்.இளங்கீரன் - 136, ரி.கமல்ராஜ் - 125, எஸ்.சயித்கோபி - 135, எஸ்.விஸ்ணுகுமாரன் - 118, எம்.மிருசா - 139, வை.தபிதா - 160, கே.விதுஜா - 142

**மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை**

தோற்றியோர் - 42, சித்தியடைந்தோர் - 05, எஸ்.அனுராஜ் - 122, ரி.தனுசன் - 119, எம்.சாரங்கா - 140, பி. ராஜினி - 128, எஸ்.சக்திதாசன்- 136

**தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்**

தோற்றியோர் - 67, சித்தியடைந்தோர் - 11, எஸ்.தர்சிகா - 132, பி.சஞ்சீவன் - 122, ரி.துவாரகன் - 154, பி.மகிதரன் - 131, எஸ்.மயூரன் - 137, ஜெ.காண்டீபன் - 124, ஜி.மாதங்கி - 126, ரி.வித்தியா - 122, பி.ஆரணி - 133, ரி.பிரிதாபானு - 139, எஸ்.தீசிகா - 120,

**வல்வெட்டித்துறை இந்து தமிழ்க் கலவன்பாடசாலை**

தோற்றியோர் - 10, சித்தியடைந்தோர் - 02, எஸ்.செல்வசேகரன் - 120, எம்.அனுத்தியா - 127

**கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 09, சித்தியடைந்தோர் 04, பி.கிருத்திகா - 128, கே.துஷ்யந்தினி - 133, ஈ.அன்பரசன்- 139, எஸ்.சிந்துஜா - 141,

**இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 28, சித்தியடைந்தோர் - 03, ஜி.புவிசாந்தன் - 118, ஆர்.கேசவர்த்தனன் - 128, கே.ராஜி-125

**வதிரி இருதயக் கல்லூரி**

தோற்றியோர் - 27, சித்தியடைந்தோர் - 04, எஸ்.அருண்குமார் - 134, கே.கீதாஞ்சலி - 119, ஆர்.சுகிலா - 153, பி.இலக்ஷி - 137

**நெல்லியடி மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 81, சித்தியடைந்தோர் - 18, ஜி.துசாந்தன் - 135, பி.ஆர்த்தியா - 133, எம்.பிரிந்தா - 143, எஸ்.தேனுகா - 120, எஸ்.அர்சித்தியா - 152, பி.அபிசாலிகா- 128, வி.கிரிசேதன் - 133, எஸ்.ஆதவன்- 141, எஸ்.துவாரகன் - 142, பி.சுதாந்தி - 141, கே.தனுஜா - 118, பி.அபிராமி- 161, ஏ.சுஷாந்தினி - 120, ரி.சுதன்- 131, யு.அனுகரன் - 144, பி.கரிதர்சன் - 129, கே.தர்சனா - 126, பி.பகரதன் - 144.

**கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்**

தோற்றியோர் - 21, சித்தியடைந்தோர் - 02. எஸ்.ஆராதனா - 141, எஸ்.சுபாஸ்கனி - 123.

**கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

தோற்றியோர் - 39, சித்தியடைந்தோர் - 07. எஸ்.கௌசிகன் - 125, கே.தேன்மொழி - 139, எஸ். அனுராஜ் - 127, ரி.கபிராஜ் - 145, எம்.கிரிஷாந் - 119, எ.ராஜ்கரன் - 135, என்.தினகரன் - 121.

**ஞானசாரியார் கல்லூரி**

தோற்றியோர் - 132, சித்தியடைந்தோர் - 04, ரி.அருந்துகா - 153, எஸ்.சரத்பவன் - 159, பி.தர்சிகன்- 147, எஸ்.துவாரகன் - 154.

**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம**

தோற்றியோர் - 28, சித்தியடைந்தோர் - 02. பா.கிரிராம் - 150, எஸ்.கலினா - 160.

**கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 23, சித்தியடைந்தோர் - 03 ரி.பாரதி - 135, எஸ்.கோவர்ததன் - 129, ஜெ.குகபிரசாந்- 127,

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**

தோற்றியோர் -48, சித்தியடைந்தோர் - 10, எஸ்.கிருசாந் - 145, எம்.உசாந்தி - 129, எஸ்.ஞானகௌரி - 123, எம்.கலைமதி - 122, எஸ்.தேனுஜா - 122, ரி.பியந்தினி - 152, எஸ்.துவாரகன் - 133, ஆர்.ஐங்கரன்- 130, எஸ்.லோஜிதன் - 134, எஸ்.தினாளன் - 121.

**கரணவாய் தாமோதர வித்தியாலயம்**

தோற்றியோர் - 23, சித்தியடைந்தோர் - 01, கே.சுபரதன்-138.

**கரணவாய் மணிவாசன்தோட்ட தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் - 24,சித்தியடைந்தோர் - 02, கலைவாணி -121, தே.விநோதா - 129.

**அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலை**

தோற்றியோர் - 16, சித்தியடைந்தோர் - 01 - ஏ.ஜெயந்தி - 138.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

தோற்றியோர் - 51, சித்தியடைந்தோர் - 02. எஸ்.கோபிகா -123, ஜி.ஆர்.சக்கினா - 118,

**வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி**

தோற்றியோர் - 44, சித்தியடைந்தோர் - 02, எம்.அனுனாளா - 118, பி.சுகிர்த்தனா - 128.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

தோற்றியோர் - 42, சித்தியடைந்தோர் - 07, ரி.கோபிராஜ் - 119, வி.கஜன் - 118, கே.செந்தூரன் - 139, வி.துவாரகன் - 122, எஸ்.நிசாந்தன்- 123, பி.கௌதமன் - 122, ஆர்.யோகிதன் - 126

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

தோற்றியோர் - 43, சித்தியடைந்தோர் - 05, ஜே.ஐங்கரன் - 148, எஸ்.ஜெயபாலன் - 126, பி.நந்தினி- 118, எஸ்.சிவதர்சினி - 126, ர.சுபாஷினி. (130)


இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!

மகாராசி சில்க்ஸ்

- சல்வார் கிற்
- இந்தியன் சாறி வகைகள்
- மற்றும் சிறுவர், சிறுமியருக்கான ரெடிமேட் ஆடைகள்

அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
பாலா, சர்மி நடித்த
காதல் கிசு கிசு
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
HULK
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2197)

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல் மூக்குக் கண்ணாடியகம்

இல. 05, பலாலி வீதி,
(அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் முக்குக் கண்ணாடிகளைப் பெறவும்,

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள், விழாமலர்கள் சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225107

# நாடாளுமன்றக் கலைப்பை எதிர்த்து
# தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்பு பேரணி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்தன்மூலம் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு எதிராக, யுத்தநிறுத்தம் செய்த இரண்டாம் ஆண்டு நிறைவு தினமான எதிர்வரும் 22 ஆம் திகதி - மாபெரும் எதிர்ப்புப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாக, ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்குமான தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் தலைவர் டொக்டர் குமார் ரூபசிங்க தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை சர்வதேச சமூகம், பொது மக்கள் மற்றும் வர்த்தக சமூகம் வரவேற்கவில்லை. இவரின் இந்த நடவடிக்கை சமாதான முயற்சிக்கு நன்மையளிக்கும் செயலல்ல. இது சிலவேளைகளில் யுத்தத்திற்கும் வழிவகுக்கும் -

அத்துடன், ஒருவருக்கும் தற்பொதுத்தேர்தல் தேவைப்படவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும், மக்களாலேயே தெரிவுசெய்யப்பட்டனர். திரும்பவும் அவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அரசமைக்கத் தேவையில்லை. இந்த தேர்தலின் மூலம் வன்செயல்கள் வருமென மக்கள் அஞ்சுகின்றார்கள்.

ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டணியில், சுதந்திரக்கட்சி பிராந்திய ரீதியில் விடுதலைப் புலிகளுடன் அதிகாரங்களைப் பகிரலாம் எனத் தெரிவித்துள்ளது. ஆனால், ஜே.வி.பி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அதிகாரங்களைப் பகிரவேண்டும் எனக் கூறுகின்றது.

இவ்வாறு இருவேறு கொள்கைகளையுடைய கட்சிகள் ஆட்சிக்கு வந்தால், எவ்வாறு சமாதானத்தை கொண்டுசெல்வார்கள்.

ஜனாதிபதி தனது கட்சியிலிருந்து இரண்டு அமைச்சுக்களை நியமித்தமை யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிர்காலத்தில் எவ்வித அதிகாரங்களும் இல்லாததையே காட்டுகின்றது. எனவும் அவர் தெரிவித்தார்.

### போதை தவிர்ப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் மது போதை ஒழிப்புப் பிரிவினரால் நடாத்தப்படும், மது ஒழிப்புத் தொடர்பான கருத்தரங்குகள் - நேற்றுமுன்தினம் வேலணை - துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திலும், மெலிஞ்சி முனை கிறிஸ்து அரசர் ஆலயப் பங்கிலும் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் அப்பகுதி இளைஞர், யுவதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# தேர்தல் வன்முறைகளை கண்காணிக்க சர்வதேச அவதானிப்பாளர்கள்!
## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களை கண்காணிப்பதற்கு- உள்ளூர், வெளியூர் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சி - தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தது.

தேர்தல் ஆணையாளர் - வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள், உள்ளூர் கட்சி கண்காணிப்புக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஏற்ற அழைப்பினை விடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் காலத்தில் வாக்களிப்பு நடைமுறைகளின்படி, பொலிஸார் மற்றும் அரச ஊடகங்கள் செயற்படுவதை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க உறுதிப்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது ஐக்கிய தேசியக்கட்சி.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்கள், கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்ததுடன், தேர்தல் வன்முறை குறித்து பெருமளவு புகார்கள் கிடைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எந்தத் தேர்தலையும் சந்திக்க ஐ.தே.கட்சி தயாராகவுள்ளது

(கொழும்பு)



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் யாப்பின் நிறைவேற்று அதிகாரத்தைப் . பயன்படுத்தி, சமாதான முயற்சிகளைப் பாதிப்படையச் செய்யும்வகையில், நாடாளுமன்றத்தை கலைத்தமை கவலைதரும் நடவடிக்கையாகும்.

இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாடாளுமன்றம் கலைத்தமை குறித்து கருத்துத் தெரிவித்தார்.

அவர் தொடந்து குறிப்பிடுகையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையை நான் வரவேற்கவில்லை. ஏனெனில், சமாதான சூழலில் அதனைப் பாதிப்படையச்செய்யும் வகையில் இந்தக் கலைப்பு இடம்பெற்றுள்ளது.

எந்தத் தேர்தலையும் சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சி தயா ராகவுள்ளது. வரப்போகின்ற தேர்தல் எமது கடந்தகாலச்சேவையை வெளிப்படுத்தப் போகின்ற களமாக அமையப்போகின்றது என்றார்.

# சபாநாயகருக்கு வழங்கிய உறுதிமொழியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீறிவிட்டார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்று 2002 ஆம் ஆண்டு சபாநாயகருக்கு வழங்கிய உறுதிமொழியை, ஜனாதிபதி சந்திரிகா மீறிவிட்டதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு நான்கு ஆண்டுகள் இருக்கும்போதே, திடீரென நாடாளுமன்றத்தினை ஜனாதிபதி கலைத்திருப்பது, முன்னர் வழங்கிய உறுதிமொழியை மீறுவதாக அமைந்துவிட்டதாக பல்வேறு அரசியல்வாதிகளும் கருத்து வெளியிட்டனர்.

2002 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி சந்திரிகா சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில்-

தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் தமது பெரும்பான்மை பலத்தை இழந்தும், புதிய மாற்று அரசு ஒன்றை ஏற்படுத்த சாத்தியமில்லாதநிலை தோன்றும்வரை - நாடாளுமன்றத்தைக் கலைக்க முயற்சி எடுக்கமாட்டேன் எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்துவிடாத சூழநிலையில், மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சி எடுக்கப்படாத சூழ்நிலையிலேயே, நாடாளுமன்றத்தினை ஜனாதிபதி சந்திரிகா கலைத்திருப்பது, எழுத்துமூலம் சபாநாயகருக்கு வழங்கிய உறுதிமொழியை மீறிவிட்டதாகவே கருதப்படுகிறது. ஜனாதிபதியின் இந்தச் செயலுக்கு - அரசியல் நோக்கத்தின் வெளிப்பாடே என பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# திலங்க சுமதிபாலவை பதவிநீக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை
## நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி

(கொழும்பு)

திலங்க சுமதிபாலவை சிறிலங்கா ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது - ரெலிக்கொம் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ அரசாங்கத்திற்கு எப்போதும் அதிகாரம் இருக்கவில்லை. இதைத் தீர்மானிப்பது ரெலிக்கொம் இயக்குநர் சபைதான்.

சிறிலங்கா ரெலிக்கொம் சட்டவிதிகள் 105 ஆவது பகுதியின் விதிப்படி இயக்குநர் சபையே தலைவரை நியமிக்கவோ, அகற்றவோ அதிகாரம் கொண்டதெனக் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா கடந்தவாரம் அரசாங்கத்திடம் திலங்க சுமதிபாலவை ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு கூறியிருந்தார் என்றும் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# ரயில்வே ஊழியர் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை ரயில்வே அதி கார சபையை, திணைக்களமாக மாற்றுமாறு புகையிரத ஊழியர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த வேலை நிறுத்தம், நாடாளுமன்றம் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து கைவிடப்பட்டதாக ரயில்வே ஊழியர்களின் - உரிமைகள், சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சுமதிபால மானவடுவ கூறியுள்ளார்.

இது தொடர்பாக இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் வேலைக்குத் திரும்புமாறு சுமதிபால மானமடுவ கோரிக்கை விடுத்தார்.

# நடைபெறப்போகும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு
## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணி யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.அதாவுல்லாவும் நடைபெறப்போகும் நாடாளுமன்றத்தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்கப்போவதாக உறுதியளித்திருப்பதாக தெரியவருகிறது.

முஸ்லிம் மதப்பிரமுகர்களின் நிர்ப்பந்தம் காரணமாகவே இவர்கள் இந்த முடிவினை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் ஹிஸ்புல்லாவும். அதாவுல்லாவும் பேச்சுநடத்தினர்.

இந்தச் சந்திப்பில்-

வேறு இரண்டு தரப்பினரும் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைத் தயாரித்து - தேர்தலில் ஒரே குடையின்கீழ் முஸ் லிம் கட்சிகள் போட்டியிட வழி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட் டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

# இராணுவப் பின்னடைவுக்கு காரணமான படையதிகாரிகளுக்கு உயர் பதவிகள்!
## ஜே.வி.பி. சார்பு இணையத்தளம் குற்றச்சாட்டு

இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, அரசாங்கத்தால் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட - மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிப்பணிப்பாளர் நாயகமாக நியமித்திருப்பதாக, ஜே.வி.பி சார்பு இணையத்தளமொன்று குற்றச்சாட்டை கிளப்பியுள்ளது. இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

போர் நடைபெற்ற காலத்தில் வன்னிப்பிராந்தியத்துக்கான கட்டளை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா பதவி வகித்தபோது, கனகராயன்குள இராணுவ முகாமைப் புலிகள் தாக்கியழித்தனர்.

இதன்போது பல மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்களையும், பொருட்களையும் புலிகள் கைப்பற்றி, படையினர் மீது மீண்டும் அழுத்தம் கொடுக்கும் நிலைக்குத் திரும்பினர்.

இந்த இராணுவ பின்னடைவு குறித்து, விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவை குற்றவாளியாக இனங்கண்டிருந்தது. இதையடுத்து அவரும், மேலும் ஏழு அதிகாரிகளும் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர்.

இராணுவ நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவை, இப்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் - தனிப்பட்ட காரணங்களுக்காக பெரும் தொகைச் சம்பளத்துடன் முதலீட்டுச்சபையின் நிர்வாகத் திற்குப் பொறுப்பாக பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமித்திருந்தது.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் இராணுவத்தில் சேவையாற்றிய மேஜர் ஜெனரல் ஏ.எம். செனவிரத்தினவுக்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான லங்கா சொப்வெயர் கம்பனி என்ற நிறுவனத்தில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி பதவி வழங்கப்பட்டிருந்தது.

இவர் யாழ்ப்பாணத்தை இராணுவத்தினரால் கைப்பற்றமுடியாது என்று முன்னர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அப்போது ஆட்சியாளராக இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை பதவி கவிழ்க்கவும் சதிசெய்திருந்ததாகவும், இவருக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு முக்கிய பதவியொன்றை வழங்கியிருப்பதாகவும் அந்த இணையத்தள செய்தியானது மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நல்லூர் கோட்ட பாடசாலைகளின் வலைப்பந்தாட்டப் போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்று வருகின்ற வலைப்பந் தாட்ட போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 2.00 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு:-

15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து கோண்டா வில் இராமகிருஷ்ண வித்தியாலயமும், நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தை எதிர்த்து செங்குந்தா இந்துக் கல்லூரியும், முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தை எதிர்த்து கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமும் மோதுகின்றன. (58)

## நல்லூர் கோட்ட மென்பந்து போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்று வருகின்ற மென்பந்து கிரிக்கட் போட்டித் தொடரில் இன்று ஸ்ரான் லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகள் விபரம் வருமாறு.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமும் கொக்குவில் இந்துக்கல்லூரியை எதிர்த்து செங்குந்தா இந்துக்கல்லூரியும் ஸ்ரான்லிக் கல்லூரியை எதிர்த்து பெரியபுலம் மகாவித்தி யாலயமும் மோதவுள்ளன.

## விளையாட்டு

## கோப்பாயில் கலந்துரையாடல்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகப் பிரதிநிதிகளுக்கிடையேயான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத் தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரை யாடலில் முக்கிய விடயங்கள் குறித்து ஆரா யப்படவுள்ளன.

கலந்துரையாடலில் அனைத்து பதிவுசெய் யப்பட்ட விளையாட்டு கழகங்களையும் பங்கு பற்றுமாறு கோப்பாய் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் பாஸ்கரன் கேட்டுள்ளார்.

# பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தால் பாகிஸ்தானில் விளையாடத் தயார்!

## இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவிப்பு

இந்திய அணி 14 வருடங்களுக்குப் பின் பாகிஸ்தானில் சுற்றுப்பணயம் செய்து விளை யாடவுள்ளது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடு கள் குறித்து ஆய்வு செய்வதற்காக 3 பேர் கொண்ட இந்தியக் குழு நேற்று பாகிஸ்தான் சென்றது. இந்தக் குழு போட்டி நடைபெறும் இடங்கள், வீரர்கள் தங்கும் ஹோட்டல்கள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு அளிப்பது உட்பட பல விடயங்களை அந்நாட்டுக் கிரிக்கெட் சபையுடன் ஆலோசனை நடத்தவுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் குறித்து இந்திய அணித் தலைவர் கங்கூலி கூறியதாவது -

இந்திய அணி 14 வருடங்களுக்குப் பிறகு நான்காவது முறையாக பாகிஸ்தான் சென்று விளையாடவுள்ளது. இதற்கு வீரர்கள் அனை வரும் தயார் நிலையில் உள்ளனர். சில வீரர்கள் பாகிஸ்தான் பயணத்தில் விளையாட மறுப்புத் தெரிவித்ததாக வந்த தகவல்கள் உண் மையானதல்ல.



எனினும் பாதுகாப்புக் குறித்த அச்சங்கள் எங் களிடம் உள்ளது. இது குறித்து வீரர்களிடம் கலந் தாலோசித்து இந்திய கிரிக் கெட் சபையிடம் ஆலோ சனை நடத்தவுள்ளதா கவும் தெரிவித்தார்.

இந்திய அணி பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட் மற்றும் ஒரு நாள் 5 போட்டிகளில் விளை யாடவுள்ளது.

# பதற்றத்துடன் ஆடியதால் இந்திய அணி தோற்றது;

## ரிக்கி பொன்டிங் கருத்து!



சிட்னியில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியாவைத் தோற்கடித்து விபி கோப்பையை அவுஸ்ரேலியா கைப்பற்றியது.

இந்தப் போட்டி முடிவடைந்ததும் வெற்றி குறித்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் கூறும்போது -

இந்தத் தொடரில் நாங்கள் சிறப்பாக ஆடி னோம். எங்கள் துடுப்பாட்டம் இந்தியாவிற்கு எதிராக சிறப்பதாக இருந்தது. ஓட்டங்களைக் குவித்து இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தினோம்.

இந்திய வீரர்கள் மிக பதற்றத்துடன் ஆடி னர். இதனை நாங்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டோம் இவ்வாறு அவர் கூறினார்.

இந்தப் போட்டி குறித்து இந்திய அணித் தலைவர் கங்கூலி கூறியதாவது -

இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது கவலை அளிக்கிறது. நாங்கள் டெஸ்ட் போட் டியில் சிறப்பாக ஆடினோம். ஒரு நாள் போட்டி லீக் ஆட்டங்களிலும் சிறப்பாக ஆடினோம். ஆனால் இறுதி ஆட்டங்களில் சரியாக ஆட முடியவில்லை. இதனை உணர்ந்து பாகிஸ் தான் சென்று சிறப்பாக ஆடுவோம் என்றார்.

## விளையாட்டு வீரர்களுக்கு ஓர் அறிமுகம்

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் முதன்மை பெறும் காலம் இது. உங்கள் பாட சாலை வீர, வீராங்கனைகள் தம் திறமையை பல்வேறு மட்டங்களில் வெளிப்படுத்தியவர்கள், அவர்களின் திறமையை அங்கீகரித்து பாராட்ட 'நமது ஈழநாடு' ஆர்வாக இருக்கிறது.

உங்கள் பாடசாலையின் இல்ல விளையாட் டுப் போட்டிகள் முடிவடைந்ததும் மிகச் சிறந்த வீரர், வீராங்கனை பற்றிய விபரங்களை (BEST ATHLETE) அவர்களின் புகைப்படத் துடன் அனுப்பிவையுங்கள்.

அவர்கள் ஏன் சிறந்த வீரராக, அல்லது வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டார் என்ற சாதனை விபரத்துடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய (அதிபரின் உறுதிக் கடிதம் அவசி யம்) முகவரி - நமது ஈழநாடு, இல.267, நாவ லர் வீதி, யாழ்ப்பாணம்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டி நியூசிலாந்து அணி விபரம் அறிவிப்பு

தென்னாபிரிக்க அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 6 ஒரு நாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட வுள்ளது.

ஒரு நாள்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி ஒக்லாந்தில் நடைபெறவுள்ளது.

முதல் இரண்டு போட்டிக்கான நியூசிலாந்து அணி வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி விபரம் வருமாறு.

பிளமிங் (கப்டன்), இயன்புலர் ,கிறிஸ் கெய்ன்ஸ், மெக்குல்லம், மார்ஷல், கேய்ஸ் மில்ஸ், ஜேக்கப் ஓரம், மைக்கேல் பொப்ஸ், ஸ்கொட் ஸ்டைரிஸ், ரபி, டானியல் வெட்டோரி மைக்கல் மாசன்.

# பா.ஜ.கவை தோற்கடிப்பதற்காக ராகுல், பிரியங்கா தேர்தல் களத்தில்!

## சோனியா காந்தி புதிய வியூகம்

(புதுடெல்கி)

1991 ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது, தந்தை இல்லாத குழந் தைகளான பிரியங்காவையும், ராகுலையும் எப்படி வளர்ப்பது என்று சோனியா காந்தி அஞ்சினார்.

ஆனால், இன்று காங்கிரஸுக்குக் கிடைத்த பொக்கிஷங்களாக அவர்கள் இருவரும் கருதப்படுகின்றனர்.

119 ஆண்டுகள் சரித்திரமும் சுமார் 50 ஆண்டு காலம் இந்தியாவை ஆண்ட பெருமையுமுள்ள காங்கிரஸ், தற்போது தோல்வியால் தளர்ந்துபோயுள்ளது.

தோல்வியிலிருந்து மீள்வதற்குள் மீண்டும் தேர்தல்கள் வந்துவிட்டன. வெற்றியோ, தோல்வியோ மீண்டும் போராட வேண்டிய நிலை காங்கிரஸுக்கு ஏற் பட்டுள்ளது.

இத்தனை கஷ்டங்களிலிருந்தும் மீள மீண்டும் தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமென்றால் கட்சிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேணடும். இளை ஞர்களால் தான் இந்தக் குறையை ஈடுசெய்ய முடியும். அப்படிப்பட்ட இளைய சக்தி யார் என்ற கேள்விக்கு கட்சி யின் முக்கியஸ்தர்கள் அளிக்கும் பதில் முன் னாள் பிரதமர் ஒருவரின் பேரனும் மற்றொரு முன்னாள் பிரதமரின் பேத்தியும், ஒரு முன் னாள் பிரதமருடைய மகன், மகளுமான பிரி யங்கா, ராகுல் காந்தி ஆகியோரே என்பதா கும்.

இவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற கோஷம் காங்கிரஸ் கட்சியில் ஒலிக் கத் தொடங்கிவிட்டன. தேர்தல் பிரசார பாதையில் பிரியங்கா, ராகுல் பெயர்கள் பெரியளவில் அடிபடத் தொடங்கிவிட்டன. சோனியா வெளிநாட்டவர் என்ற எதிர்க்கட்சி களின் குற்றச்சாட்டுக்கு சரியான பதில்களாக இவர்கள் விளங்குகின்றனர்.

ராஜீவ்காந்தியின் உருவத் தோற்றத்தில் ராகுல் இருக்கின்றார் என்று சகோதரி பிரி யங்கா அனைத்துக் கூட்டங்களிலும் சொல்லி அனைவரது கவனத்தையும் ராகுலின் பக்கம் திருப்பிவருகிறார்.



ராகுல் பொதுக்கூட்டங்களில் அதிகம் பேசிப் பழக்கம் இல்லாதவர். தவிர்க்க முடி யாத நேரங்களில் மட்டுமே வாய் திறப்பார். பிரிட்டனில் நிரந்தரமாகவே குடியேறிவிட வேண்டுமென்று முதலில் நினைத்தவர். பொறியியல் படித்த இவர், தந்தையைப் போலவே விமானங்களில் மோகம் கொண்ட வர். சப்தர் ஜங் விமானப் பயிற்சித் தளத் தில் பைலட்டாக பயிற்சிபெற்றுள்ளார். அத் துடன் இவர் சிறந்த புகைப்பட நிபுணர். நேரம் கிடைக்கும் போதெல்லாம் காட்டுப் பகுதி களுக்குச் சென்று பயங்கர விலங்குகளைப் படம்பிடிப்பது இவரது வழக்கம்.

ராகுலுக்கு நல்ல இந்தியப் பெண் ணாக மணம் முடித்துவைக்கவேண்டு மென்று சோனியா விரும்புகிறார். ஆனால், அவர் கொலம்பியா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவருடன் சுற்றிவரு கிறார். அந்தப் பெண் சோனியாவின் குடும்பத்திற்கு நெருக்கமாக இருந்து வருவது நேருவின் குடும்பத்தில் மற் றொரு வெளிநாட்டு மருமகள் நுழை வதை தடுக்கமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சோனியா போட்டியிட்ட போது, அம்மாவை வெற்றிபெறச் செய் யுங்கள் என்று பிரியங்கா செய்த பிர சாரம் மக்களைக் கவர்ந்திருந்தது. அர சியலில் ஈடுபடமாட்டேன் என்று அவர் இதற்கு முன் சொல்லி வந்தாலும், தற்போது அரசியலில் ஈடுபடுவேன். ஆனால் எப்போது இறங்குவேன் என்று உறுதியாகக் கூறமுடியாது என்று கூறிவருகிறார்.

பாட்டி இந்திராகாந்தி போட்டியிட்ட ரேப ரேலி தொகுதியில் இருந்துதான் போட்டியிட விரும்புவதாக பிரியங்கா தனக்கு நெருங்கிய வர்களிடம் கூறிவருவது, காங்கிரஸ் தலைவர் களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. ராகுலை விட பிரியங்காவில் தான் அரசியல் தோற்றம் தென்படுகிறது. பிரியங்காவில்தான் அரசியல் வாதி தோற்றம் அதிகம் காணப்படுகிறது.

## பீஹாரில் காங்கிரஸ் கட்சிக்கு அதிக இடங்களை ஒதுக்க தயார்; லல்லு பிரசாத் தெரிவிப்பு!

பீஹார் முன்னாள் முதலமைச்சரும் ராஷ் ட்ரிய ஜனதாதள தலைவருமான லல்லு பிரசாத், பெங்களூரில் செய்தியாளர்களுக்குப் பேட்டிய ளித்தபோது -

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்க தமது கட்சி தயாராக இருப்பதால் இதுபற்றி ஆராய்ந்து விரை வில் முடிவெடுப்போம் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்த தேர்தலில் பீஹாரில் 5 நாடாளுமன் றத் தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிட்டது. இதில் மூன்று இடங்களில் வெற்றிபெற்றது. இப்போது கூடுதல் இடங்களை ஒதுக்குவோம். ஆனாலும் மற்ற கூட்டணிக் கட்சிகளின் நிலை யையும் பரிசீலிக்க வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் வாஜ்பாய் அரசு தோல்வியடைந்து விட்டது. பிரதமர் வாஜ்பாய் பைசாபாத்தில் நடந்த கூட்டத்தில் அயோத்தி யில் ராமர் கோவில் கட்டப்படும் என்று பேசி யிருப்பதன் மூலம் பாரதீய ஜனதாவின் சுய ரூபம் தெரிந்து விட்டது என்றார்.

## வைகோ பிணைக்கு இடைக்காலத் தடை தமிழக அரசின் மனு நிராகரிப்பு!

மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் பிணையை ரத்துச் செய்யக்கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனு நேற்று சென்னை உயர்நீதிமன்றில் நீதிபதி சிர்புர்கர் மற்றும் திருமதி இப்ராஹிம் கலிபுல்லா அடங்கிய நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

அப்போது இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை வைகோவின பிணைக்கு இடைக் கால தடை விதிக்கும்படி அரசு கோரியிருந் ததை நிராகரித்த நீதிபதிகள், அரசு தாக்கல் செய்துள்ள மனு தொடர்பாக பதிலளிக்குமாறு வைகோவுக்கு கடிதம் அனுப்ப உத்தரவிட்டனர்.

பொடா வழக்கில் கைதுசெய்யப்பட்ட வைகோவை பூந்தமல்லி பொடா நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணையில் விடுவித்தது. அன்றைய தினமே அவருக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச்செய்யக்கோரி தமிழக அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் - எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சகல அரச திணைக்களங்கள், துணை அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களை இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் க.கனகரத்தினம் அறிவித்துள்ளார். (116)

### பங்குச்சந்தை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கி மனேஜ்மன்ரலி லிமிட்டெட் ஸ்தாபனத்தார். வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலக அலுவலர்களுக்குப் பங்குச்சந்தை தொடர்பாக விளக்கமளித்தனர்.

பங்குச்சந்தை என்றால் என்ன, அதனால் கிடைக்கும் இலாபம் என்ன, எவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்வது என்பது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. (24)

### நீர்த்தாங்கி கட்டும்பணிகள் பூர்த்தி

யாழ். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு - யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் ஒரு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு பூர்த்தி அடையும் நிலையிலுள்ளது.

இதன்மூலம், இந்தக் கல்லூரியில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக்கட்டடத்தில் அமைந்த - பௌதிக, உயிரியல், இரசாயன ஆய்வுகூடங்களுக்கும், மாணவர்களுக்கும் குடிநீர்வசதி இலகுவில் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (116)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ச.சாயினி

முகவரி : இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி


# அரசியல் சுயலாபங்களுக்காக செயற்படும் தீயசக்திகளிடம் விழிப்பாக இருங்கள்

## அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்

(யாழ்ப்பாணம்)

'விடுதலைப் போராட்டத்தில் வரலாறுக அமையப்போகும் யாழ்குடா நாட்டை, இன்றுகூட நாற்பதினாயிரம் படைகள் சுற்றி வளைத்துள்ளன. திட்டமிட்ட வகையில் கலாசார சீரழிவுகளை இங்கு விதைத்துக்கொண்டு, மறுபுறம் தமது சுய அரசியல் இலாபத்திற்காக மக்களுடன் உறவாடி தீயசக்திகள் விளைகின்றன. இவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்து விழிப்பாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு தேசிய எழுச்சிப் பேரவைக்கு உண்டு' எனத் தெரிவித்தார் - தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட மட்ட மூன்றாவது பேராளர் மாநாடு - கடந்த சனிக்கிழமை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய சோ.தங்கன் தொடர்ந்து கூறுகையில் -

போர் இடம்பெற்ற காலத்தில் போர் எழுச்சிக் குழு எவ்வாறு செயற்பட்டதோ, இன்று அதேபோல் தேசிய எழுச்சிப் பேரவை செயற்படுகின்றது. நாம் அனைவரும் ஒன்றுகூடி விழிப்புடன் செயலாற்றவேண்டும். இன்றைய சமாதான சூழலில்கூட மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை. தேசியத்தலைவரின் கரங்களுக்கு பலம்கொடுக்க வேண்டும். தேசத்தை கட்டிவளர்க்கும் பாரிய பொறுப்பைச்சுமந்து செயற்பட வேணடும். தேசிய எழுச்சிப் பேரவைக்கு பாரிய பொறுப்பு உண்டு.

கலாசார விழுமியங்கள் காக்க முடியாதளவு சிதைக்கின்றன. அதே வேளை - எயிட்ஸ் நோய் அபாயமாக உள்ளது. இதற்காகவே தேசியத் தலைவரின் நேரடி திட்டமிடலில், எயிட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இளம் சமுதாயம் அபாயகரமான பாதையை நோக்கிச் செல்கின்றது. அடுத்து வரும் சந்ததிகள் பின்தங்கிய நிலைக்குச் செல்லப்போகின்றன. இளம் சமுதாயத்தை அழிவுப்பாதையிலிருந்து காக்கவேண்டிய பொறுப்பு உண்டு. 17000 இற்கும் அதிகமான மாவீரர்களை, அவர்களின் தியாகங்களை எண்ணிப்பார்க்கவேண்டும்.

அழிக்கப்பட்டவை, சிதைக்கப்பட்டவை என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும். தங்கள் சுயலாபத்திற்காவும், அரசியல் இலாபத்திற்காகவும் எம்மக்களை விலைகொடுத்து வாங்க பலர் முயற்சிக்கின்றார்கள். மக்களுடன் உறவை பலப்படுத்த முனைகிறார்கள்.

விடுதலைப் போராட்டத்தை சிதைக்க முற்படுபவர்களை நாம் அனுமதிக்க முடியாது. உறவுக்கு அடிமையாகமுடியும். உரிமைக்கு அடிமையாக முடியாது. பதவி பட்டங்கள் எதற்காக? இந்தப் போருககு முடிவுவந்தால் மட்டுமே அனைத்திற்கும் முடிவுவரும். உலகம் உண்மையை உணர்ந்துள்ளது. ஒன்றுபட்டு ஒருமித்து செயற்படுவோம் என்றார்.

இந்தப் பேராளர் மாநாடு - பேரவையின் மாவடட செயலாளர் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்றது. மாநாட்டில் பல திட்டங்கள் முன்மொழியப்பட்ட முடிவுகள் எட்டப்பட்டன. 1000 இற்கும் அதிகமான பேராளர்கள் மாநாட்டில் பங்குபற்றினர். (111)

## யாழ்.பல்கலைக்கழக

# ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகத்தினர் சந்திப்பு

தமிழீழக் கல்விக் கழகத்தின் அனுசரணையுடன், பல்கழைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இடையே - நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் சில ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகப் பல்கலக்கழக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இதுபற்றி அறிவிக்கப்பட்டது.

# சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியோருக்கு பாடத் தெரிவு வழிகாட்டல் கருத்தரங்கு

2003 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான - பாடத்தெரிவு தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு, கோட்டரீதியாக தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையினரால் நடத்தப்பட வுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் கோட்டத்திற்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் கோட்டத்திற்கு மத்திய கல்லூரியிலும், கோப்பாய்க் கோட்டத்திற்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்,

20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் கோட்டத்திற்கு இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய கோட்டங்களுக்கு சண்டிலிபபாய் இந்துக் கல்லூரியிலும்,

23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி கோட்டத்திற்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை கோட்டத்திற்கு வட.இந்து மகளிர் கல்லூரியிலும், 25 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச சேரி கோட்டதிற்கு சாவகச்சேரி இந துக் கல்லூரியிலும், 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிககு தீவகக்கோட்டத்திற்கு வேலணை சேர வைத்தியலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த உயர்தர வகுப்புப் பகுதித் தலைவர்களையும், வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர்களையும், மாணவர்களையும் குறித்த நாட்களில் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பாக சமூகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி மண் ஏற்றியோர் பொலிஸாரால் கைது

அரியாலை - கொழும்புத்துறைப் பகுதியில் அனுமதியின்றி மண் ஏற்றியவர்களை - பொலிஸார் கைதுசெய்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன தினம் இடம்பெற்றது.

அரியாலைப் பகுதியில் உழவு இயந்திரத்திலும், கொழும்புத்துறைப் பகுதியில் பாரவூர்தியிலும் அனுமதிபொறாது மண் ஏற்றியவர்களையும், மண் ஏற்றிய வாகனங்களையும் பொலிஸார் கைதுசெய்தனர். அனுமதி இன்றி மண் ஏற்றியவர்கள் சந்தேகத்தின் பெயரில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். மண் ஏற்றிய வாகனங்கள் இரண்டும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

## சின்னஞ் சிறு செய்திகள்

### புதிய நிர்வாகிகள் தெரிவு

(அராலி)

அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் - புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நிலைய டிண்டபத்தில் இடம்பெற்றது.

தலைவராக எஸ்.நல்லதம்பியும், உபதலைவராக வி.தயாணந்தனும், செயலாளராக இ.அம்பிகைபாகனும், பொருளாளராக அ.பிரபாகரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (118)

### சிவபுராணப் புத்தகம் அன்பளிப்பு

இந்து சமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் யாவற்றுக்கும் மகா சிவராத்திரியை முன்னிட்டு சிவபுராணப் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. இதனை காங்கேசன்துறை வீதியில் உள்ள மில்க்வைற் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தொழிலதிபர் 'இ.தவபால் தெரிவித்தார்.

### மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

(நெல்லியடி)

யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் ஒருவர் காயமடைந்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சையை முடித்துக்கொண்டு வெளியேறி வீதிக்குச்சென்றபோதே, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் - ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த என்.கிருபாகரன் (வயது-48) என்பவர் காயமடைந்தார். (12)

### தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் தெரிவு

(வண்ணை)

யாழ். நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றிய புதிய நிர்வாகத்தெரிவு, அண்மையில் இடம் பெற்றது. தலைவராக ச. புவனேந்திரனும், செயலாளராக பி.பிரதாபனும், பொருளாளராக கே.ஜெயந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர். (111)

### தென்மராட்சியில் 'நீர்ப்' வேலைத்திட்டம்

தென்மராட்சிப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜம்செய்த, வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் - சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேசசபையினால் செயற்படுத்தப்படும் நீர்ப் அவசர புனர்நிர்மாண வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

நீர்ப் வேலைத்திட்டத்தினூடாக, சாவகச்சேரி நகர குழாய்நீர் விநியோகத் திட்டம், மற்றும் பொதுக் கிணறுகள் திருத்தம்செய்தல் என்பன செயற்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.




கியூடெக் உயிர்ப்பூட்டல் குழுவினரால் நடத்தப்பட்ட - சமாதான நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்ட மீ.புனிதராஜா உரையாற்றுவதைக் காணலாம்

## யாழ்.மாவட்டத்தில்

# 2002 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6,44,279 பேர் வாக்களிக்கத் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6,44,279 பேர் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் யாழ்.மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டமும் அடங்கலாக - 11 வாக்கெடுப்பு பிரிவுகள் உள்ளன.

ஊர்காவற்றுறையில் 51 ஆயிரதது 911 வாக்காளர்களும், வட்டுக்கோட்டையில் 61 ஆயிரத்து 283 வாக்காளர்களும், காங்கேசன்துறையில் 64 ஆயிரத்து 434 வாக்காளர்களும், மானிப்பாயில் 65 ஆயிரத்து 218 வாக்காளர்களும், கோப்பாயில் 61 ஆயிரத்து

403 வாக்காளர்களும், உடுப்பிட்டியில் 54 ஆயிரத்து 87 வாக்காளர்களும், பருத்தித்துறையில் 45 ஆயிரத்து 457 வாக்காளர்களும், சாவகச்சேரியில் 57 ஆயிரத்து 379 வாக்காளர்களும், நல்லூரில் 67 ஆயிரத்து 672 வாக்காளர்களும், யாழ்ப்பாணத்தில் 57 ஆயிரத்து 460 வாக்காளர்களும், கிளிநொச்சியில் 57 ஆயிரத்து 975 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக யாழ்.செயலகத்தில் இயங்கும் தேர்தல் அலுவலர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பால்மா பைக்கற்றுக்கள் விற்றவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது

கூட்டுறவுச் சங்கக்கடையை உடைத்து பால்மா பைக்கற்றுக்களைத் திருடிச் சென்று விற்பனை செய்த நபர், கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - கொடிகாமம் பகுதியில் உள்ள கடைகளுக்கு, பால்மா பைக்கற்றுக்களை கடைகடையாகச்சென்று விற்பனை செய்த நபரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பிடித்து விசாரணை செய்தபோது, அவர் தாவடியிலுள்ள கூட்டுறவுச் சங்கக்கடையை உடைத் துப் பொருட்களைத் திருடியமை தெரியவந்தது. இவரிடமிருந்து 36 பால்மா பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.




# தேவை நல்ல காற்று

சுவாசம் தொடர்பான நோய்களினால் பாதிப்படைந்தவர்களுக்கு - வளியிலுள்ள நச்சுக்காற்றை சுவாசிக்கும்போது, நோயின் தாக்கம் அதிகரிப்பது இயல்பாகும். இதனால், பிரித்தானியாவின் ஆறு பல்கலைக்கழகங்கள் வளியில் காணப்படும் நச்சுக்காற்றின் அளவை முன்னரே அறிந்துகொள்வதற்கான தகவல்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். வளியின் வெப்பநிலை அதிகரிப்பும், காலநிலை மாற்றத்தை உருவாக்கி, அது வளியின் தரத்தில் மாற்றத்தை உண்டாக்குவதாக 'லிட்ஷ்' பல்கலைக்கழக பேராசிரியர் மைக் பில்லங் தெரிவித்துள்ளார்.



வளியின் வெப்பநிலை அதிகரிப்பின்போது, இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும் வெப்பநிலை அதிகரிப்பு - வளிமண்டலத்தில் காணப்படும் இரசாயனப் பொருட்களினிடையே தாக்கத்தை (REACTION) உண்டாக்குவதாகவும், இவை வளிமண்டலத்தை அசுத்தமாக்கும் பொருட்கள் (POLLUTANTS) உருவாக்குவதாகவும் பரிசோதனைகளிலிருந்து அறிந்துகொண்டுள்ளனர்.

கோடை காலத்தில் வளிமண்டலத்தில் அதிகரிக்கும் வெப்பநிலை - வளிமண்டலத்தில் ஓசோனின் அளவினை அதிகரிக்கச் செய்வதாகவும், அத்துடன் வளிமண்டலத்தில் சிறுதுணிக்கைகளின் அளவும் அதிகரிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவை மனித ஆரோக்கியத்திற்கு தீங்குவிளைவிப்பதாகவும் அமைகின்றன. மேலும், வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் காபன் துணிக்கைகள் (SOOTS) - சூரிய வெப்பத்தினால் உறிஞ்சப்பட்டு, வளிமண்டலத்தின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

# சிவப்பு நிற அணில்கள்



பிரித்தானியாவின் வின்பெல் காட்டுப் பிரதேசத்தில் ஊசி இலை மரங்கள் (Conifer Tress) அதிகளவில் காணப்படுகின்றன. இந்த மரங்களைச் சாம்பல் நிறமான ஒருவகை அணில்கள் தமது வசிப்பிடமாக ஏற்றுக்கொள்வதில் அதிக நாட்டம செலத்துவதில்லை. இதனால், சிவப்பு நிறமுடைய பிறிதொரு வகையான அணில்கள் ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளன.

சிவப்பு நிற அணில்கள் வட அமெரிக்காவிலிருந்து பிரித்தானியாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. மேலும் சிவப்பு நிற அணில்களினால் நோயும் பரப்பப்பட்டு, வாழ்விடங்களையும் (Habitats) இழந்துவிடும் நிலை ஏற்பட்டிருந்தது. இதனால், சிவப்பு நிற அணில்களுக்கு மிகவும் பிடித்தமான ஊசியிலை மரங்களை வளர்த்து, சரணாலயங்களைப் பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டுவருகின்றது. இந்த வகையான 18 சரணாலயங்களை உருவாககி, அவற்றை அழிவின் விளிம்பிலிருந்த காப்பாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளார்கள்.

# நோய் எதிர்ப்பு சக்தி

உடலின் எதிர்ப்புசக்தியை (Anibiotic) உருவாக்கும் மருந்துகள் வலிமையை இழந்துவருவதால், புதிய மருந்துகளை உருவாக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மாற்றுவழிகளையும் அறிந்துகொள்ளவேண்டியநிலை விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

நோய்க்கிருமிகளை உணவாகப் பாவிக்கும் ஒரு வகைக்கிருமியான பெடிலொவோவிபிரியோ (Bdell-ovibrio) வை விஞ்ஞானிகள் நீண்டகாலமாக அறிந்துள்ளனர். இவை நோய்க்கிருமிகளுடன் போராடி, அவற்றை செயலிழக்கச் செய்யும் ஆற்றல் கொண்டுள்ளன.



நோட்டிங்கம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் - கிருமியின் மரபணுத் தொகுதியை வரைந்துள்ளனர்.

இவை எவ்வாறு ஒருவரின் உடலின் காணப்படும் நோய்க்கிருமிகளை இனங்கண்டு தாக்குகின்றன என்பதை விபரித்துள்ளனர்.

பற்றீரியாக்கள் உடல்கலத்தில் காணப்படும்போது, வெளிப்படுத்தும் இரசாயனப் பொருட்களை இனங்கண்டு, அந்த இடத்தில் தாக்குதல் மேற்கொண்டு, ஒருவித இரசாயனப்பொருளை சுரப்பதன்மூலம் அந்தக் கலங்களையும், கிருமிகளையும் உணவாக எடுத்துக் கொள்கின்றன.

உடலில் கிருமிகள் காணப்படும் இடத்தில் அவற்றைக் கொல்வதற்கு உபயோகிக்கப்படும் இரசாயனப் பொருளைப் பிரித்தெடுத்து, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் மருந்துகளைத் தயாரிப்பதற்கு விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

# துருவப் பகுதியில்

துருவப் பகுதியில் வாழும் உயிரினங்கள் (EXTRE MOPHILES) மிகவும் தாழ்ந்த வெப்பநிலையில் உயிர்வாழ்வதற்கேற்றவாறு தமது உடலமைப்பை உருவாக்கியுள்ளன. இவ்வகையான உயிரினங்கள் மிகவும் தாழ்ந்த வெப்பநிலையிலும் உயிர்வாழ்வதற்குப் பொருத்தமில்லாத காலநிலையிலும் எவ்வாறு உயிர்வாழ்கின்றன என்பதை அறிந்துகொள்வதில் விஞ்ஞானிகள் மிகுந்த ஆர்வங்காட்டி வருகின்றனர்.



புதிய மருந்துகளைத் தயாரிப்பதறகும், புதிய இரசாயனப் பொருட்களை உருவாக்குவதற்கும், வர்த்தகரீதியான உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் இந்த உயிரினங்கள் உதவுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இதனால், இவ்வகையான உயிரினங்களை வேட்டையாடுவதில் அதிகளவில் ஆர்வங்காட்டப்பட்டுவருகின்றன. மிகுந்த குளிர், அதிக உப்புத்தன்மை கொண்ட நீர், ஆகியவற்றில் வாழ்வதற்கேற்றவாறு பரிமாண வளர்ச்சியடைந்துள்ளன. நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும், புற்றுநோய் சிகிச்சைக்கும், புதிய மருந்துகளை உருவாக்குவதற்கும் இந்த உயிரினங்கள் உதவலாமென விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உறைபனியில் வாழும் உயிரினங்கள் - தாழ்ந்த வெப்பநிலையில் விறைத்துப் போகாதிருப்பதற்கு-கிளைக்கோ புறோரின் (GLYCO PROTEIN) எனப்படும் இரசாயனப் பொருளைத் தமது உடலில் உற்பத்தி செய்கின்றன. இவ்வகையான இரசாயனப் பொருளை வர்த்தகரீதியாக உற்பத்தி செய்யும்போது, மீன்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நீண்டகாலத்துக்கு உறைநிலையில் மீன்களை பாதுகாப்பதற்கும், மனித உடலுறுப்புக்களை மாற்றிடு செய்யும்போது, வழங்கப்பட்ட உடலுறுப்பை (DONOR ORGANS) நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பாக வைத்திருக்கும் நவீன அறுவைச் சிகிச்சைகளும், இந்த உயிரினங்களின் வாழ்க்கைமுறை பேருதவியாக அமையலாமெனவும், விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# குளோரோ புளோரோ காபன்



குளோரோ புளோரோ காபன் எனப்படும் இரசாயனப் பொருட்கள், குளிர்ப்பெட்டிகள், குளிரூட்டும் சாதனங்களில் வெப்பநிலையைக் குறைப்பதற்காக முக்கியமாகப் பாவிக்கப்படுகின்றது.

இந்த இரசாயனப் பொருட்கள் - வளிமண்டலத்தின் ஓமோனின் அளவைக் குறைப்ப திலும் முக்கிய பங்காற்றுகின்றது. கனடாவின் தலைநகர் மொன்றியலில் இது தொடர்பான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, இவற்றின் பாவனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரசாயனப் பொருட்கள் தற்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைக்கூடாக போதைப் பொருள் கடத்தலை மேற்கொள்பவர்களால் கடத்தப்பட்டுவருகின்றது. மேலும், சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு, ஆசிய நாடுகளில் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

இவை எரிவாயுக் கொள்கலங்களினூடாக இலகுவில் கண்டுபிடிக்க முடியாதவாறு கடத்தப்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக்காலத்தில் போதைப்பொருட்களின் கடத்தலை முற்றாகத் தடைசெய்திருந்தனர். இதனால், இவ்வகையான இரசாயனப்பொருட்களின் கடத்தலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஆப்கானிஸ்தான் - தலிபானின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டதும், இந்த இரசாயனப் பொருட்களின் கடத்தலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நீர்வாழ் தாவரங்கள்



ஆழம் குறைந்த கடல் நீரின் இருபுறமும் காணப்படும் மரங்களை மாங்குறுவ் (MAN-GROVE) என அழைக்கப்படுகின்றன. இவை காடுகளினூடாகச் செல்லும் கடலின் இரு பக்கத்திலும் செழித்து வளருகின்றன. இந்த மரங்களும், பற்றைகளும் உப்பு நீரிலும் வாழ்வதற்கேற்றவாறு தம்மை மாற்றியமைத்துள்ளன.

இவை கடலின் கரையைப் பாதுகாப்பதுடன், கடற்புற்கள் (SEA GRASS), பவளப்பாறைகள் (CORAL REEFS) ஆகியவற்றிற்கும் பாதுகாப்பு வழங்குகின்றன. அத்துடன், நீர்வாழ் உயிரினங்களுக்கும் பாதுகாப்பளிக்கின்றன. இவற்றின் வேர்கள் நீருக்குள் அமிழ்ந்து காணப்படுவதால், மீன் குஞ்சுகளுக்கு அதன் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் மிகுந்த பாதுகாப்பை கொடுக்கின்றன.

மெக்சிக்கோ, மெலிசி ஆகிய பிரதேசங்களில் இவ்வகையான ஆய்வுகளை நீர் தொடர்பான உயிரியலாளர்கள் (MARINE BIOLOGIST) மேற்கொண்டிருந்தனர். இந்த மரங்கள் நீரைநோக்கி வளர்வதால், சிறிய நீர்வாழ் உயிரனங்களுக்கு மிகுந்த பாதுகாப்பையும் வழங்கி வந்துள்ளன. இவ்வகை இனங்கள் தமது முதிர்ச்சிப் பருவத்தை அடைந்து, வேறு இடங்களை நாடிச் செல்லும்வரை, அவற்றின் உணவுத் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகின்றன.

வளர்ந்த பின் பவளப்பாறைகளில் புகலிடம் தேடிச்செல்கின்றன. இந்த மரங்கள் அழிக்கப்படும்போது, மீன் குஞ்சுகள் தமது இளமைப்பருவத்திலேயே பவளப்பாறைகள் காணப்படும் இடங்களை நோக்கி நகர்ந்து செல்லவேண்டியுள்ளது. இதனால், எதிரிகளிடம் (PREDATORS) சிக்கிக்கொள்ள நேர்கிறது. இந்த மரங்கள் அழிக்கப்படுவதால், 64 வகையான மீனினங்கள் தமது வாழ்விடங்களை இழந்து மரணமடைய நேரிடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# யானைகளுக்குரிய சிகிச்சை

சிறைப்பிடிக்கப்பட்ட யானைகள் மிகுந்த மன அழுத்தத்திற்கு உட்படுத்தப் படுகின்றன என இந்தியாவின் வனவிலங்கு நிலையம் தெரிவித்துள்ளது. இவை தொடர்பான உண்மைகளை கண்டறிவதற்கு - சிறைப்பிடிக்கப்பட்ட வன விலங்குகளின் மன அழுத்தம் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதற்கு மேற்கொண்டுவரும் 'எல்க்' என்ற உயிரியலாளர் இந்தியாவிற்கு அழைக் கப்பட்டிருந்தார்.



இவர் யமுனா நதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த யானைகள் காலணி ஒனறிற்குச் சென்று, அங்கு பாரிய வேலைகளைச் செய்வதற்குப் பயிற்றுவிக்கப் பட்ட யானைகளின் மன அழுதத்தினைப் பரிசோதித்துள்ளார்.

இவர் தனது சோதனைகளுக்கு 'கங்காரா' எனப்படும் வயது முதிர்ந்த ஆண் யானை ஒன்றினை தேர்ந்தெடுத்திருந்தார். யானையின் உடல் பாகங்களையும், தும்பிக்கையையும் வருடுவதன்மூலம், யானைக்கும் தனக்கும் இடையே பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டார். கண்களில் தொடர்ந்து கண்ணீர் வடிவதிலிருந்து மிகுந்த தூசிகள் மத்தியில் வேலை செய்வதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக இந்தியாவின் வனவிலங்கு நிலையத்தில் கடமையாற்றும் மிருகவைத்தியர் டொக்ரர் 'ஆனத்' கருத்துத் தெரிவிக்கும்போது -

யானைகளைப் பராமரிப்பவர்கள் அவற்றிற்கு சிறந்த உணவுகளை வழங்குவதில்லை எனவும், அவற்றிற்கு அசுத்தமான நீரைப் பருகுவதற்கு நிர்ப்பந்திப்பதாகவும், சங்கிலியால் பிணைக்கப்பட்டு நீண்டநேரம் நிற்க வைப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனால், இந்தியாவில் யானைகள் மிகுந்த மன அழுத்தத்துடன் வேலை செய்வதாகவும் தெரிவித்தார்.

# திரை விமர்சனம்




தெலுங்கில் வெளியிடப்பட்டு தியேட்டரில் நல்ல வசூலைக் கொடுத்த 'ஆதி' என்ற படத்தின தமிழ்வடிவம்தான் ஜெய். ஆனால, எதிர்பார்த்தளவுக்குப் பெரிதாக ஓடவில்லை. வெளிநாட்டிலிருக்கும் தியாகராஜன், தன்னுடைய ஏராளமான சொத்துக்களை இங்கிருக்கின்ற ராஜன் பி தேவ் வசம் ஒப்படைத்து விட்டுச்செல்கிறார். திரும்பிவரும் அவர் சொத்துக்களை ஏழை மக்களுக்குக் கொடுக்க முயற்சிசெய்கிறார். வழக்கம்போல சொத்துக்காக நடக்கும் வெட்டுக்குத்துக்களில் தியாகராஜன் அவுட். அவரின் மகனை வளர்க்கிறர் ராஜ்கிரண். வளர்ந்து பெரியவராகும் மகன் பிரசாந் - கல்லூரி மாணவியைக் காதலிக்கின்றார். மாணவி? ஆம் உங்கள் கணிப்புச் சரிதான். அவர் தான் வில்லனின் மகள். காதல் கைகூடியதா? இதுதான் கிளைமார்க்ஸ். பிரசாந் தன்னுடைய உடம்பைக்காட்டி நடிக்கும் அளவுக்கு நடிப்புக்குப் பஞ்சமா? வில்லனிடம் அளவுக்கதிகமாக குரூரம். தாமு - வையாபுரி மிஞ்சிய நகைச்சுவை. தயவுசெய்து இனிமேலும் வேண்டாம். தயாரிப்பாளரும் நடிகருமாகிய தியாகராஜன் - தன்னுடைய பங்கைச்சிறப்பாகச் செய்திருக்கின்றார்.

ராஜ்கிரணுக்கு நல்ல குணச்சித்திரவேடம். மணிசர்மாவின் இசை, தளபதி தினேஷின் சண்டைப் பயிற்சி இரண்டும்தான் படத்தின் பலம். ஜெய் - ஜெயம் இல்லை.

- PNS

# புதிய இரசாயனப் பொருட்கள்

விஞ்ஞானம், பொருளாதாரம், சமாதானம், இலக்கியம் ஆகியவற்றிக்கு வழங்கப்படும் நோபல் பரிசை - சுவீடனைச் சேர்ந்த இரசாயனவியலாளர் அல்பேட் நோபல் உருவாக்கினார். இந்த விஞ்ஞானி ஆக்கபூர்வமான நோக்கங்களுக்கான நைதரோ கிளைசெறின் (NITRO GLYCERINE) என்ற இரசாயனப்பொருளை உருவாக்குவதில் வெற்றிகண்டிருந்தார். இந்தப் பொருள் அதிகளவிலான வெடிக்கும் இயல்பை (EXPLOSIVE PROPERTY) கொண்டிருந்தால், அழிவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்பட்டு வருகின்றது.



இதனால், பாதுகாப்பான புதிய பொருட்களை உருவாக்குவதில் நீண்டகாலமாக இரசாயனவியலாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டுவந்தனர்.

இந்த ஆய்வுகளின்மூலம் பூராநெறியோல் (BUTANETRIOL) எனப்படும் இரசாயனப்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரசாயனப்பொருள் ரொக்கெட்டுக்களின் உந்துசக்தியை (PROPELLANT) பயன்படுத்திவருகிறது. ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் பெரும் சேதங்களை ஏற்படுத்திய அபாச்சே (APACHE) ஹெலிகொப்டர்களிலிருந்து ஏவப்பட்ட ரொக்கெட்டுக்களில் இவ்வகையான இரசாயனப் பொருட்களே பாவிக்கப்பட்டன. இவற்றின் உற்பத்திக்கு அதிக செலவேற்பட்டதால், பற்றீரியாக்களை உபயோகித்து இந்த இரசாயனப்பொருளை உற்பத்தி செய்யவுள்ளனர்.

பற்றீரியாக்கள் - பாண், வெண்ணெய்க்கட்டி, பியர், வைன் ஆகியபொருட்களில் இரசாயன மாற்றங்களை உருவாக்குவதில் மிகுந்த பங்கினை ஆற்றிவருகின்றன. இதனால், தானியங்கள், சீனிக்கிழங்கு (SUGAR BEET) ஆகியவற்றில் காணப்படும் காபோவைதரேற்றை 'பூராநெற்றியோல்' ஆக மாற்றும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், சூழலுக்குப் பாதிப்பற்ற ஒரு இரசாயனப்பொருளை உருவாக்கமுடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

# கண்ணிவெடிகள்




டென்மார்க்கைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நிலத்திற்குக்கீழ் அமைந்திருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு, மரபணுவில் மாற்றங்கள் செய்யப்பட்ட (GENETICALLY MODIFIED) தாவரங்களை அவற்றைக்கண்டுபிடிப்பதற்கு உபயோகப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தாவரங்களை வெடிக்காத கண்ணிவெடிகள் காணப்படும் பிரதேசத்தில் பயிரிடும்போது, இவை தமது நிறத்தை பச்சையிலிருந்து சிவப்பு நிறத்திற்கு மாற்றிவிடுகின்றன.

கண்ணிவெடிகளிலிருந்து நைதரசனீரொட்சைட்டு கசிவதாலேயே தாவரத்தில் நிறமாற்றம் ஏற்படுவதாக, இவற்றை உருவாக்கிய ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. கண்ணிவெடிகள் பலமுறைகளில் நிலத்திலிருந்து அகற்றப்படுகின்றன. குறிப்பாக பயிற்சி அளிக்கப்பட்ட வெடிபொருட்களை முகர்ந்து (SNIFFER) உணரக்கூடிய நாய்களையும், பாரம்கூடிய வாகனங்கள், உலோகங்கள், உணரக்கூடிய கருவிகள் (METAL DETECTORS) ஆகியவற்றைப் பாவிக்கின்றனர்.

தாவரங்களுக்கு கிருமிநாசிகளை விசிறும் (SPRAY) விமானங்களையும், நீண்டதூரத்திற்கு விதைகளை விசிறக்கூடிய குழாய்களையும் பாவிக்கலாமென இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனாலும், ஹலோ ட்ரஸ்ட் (HALO TRUST) எனப்படும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த சர்வதேச கண்ணிவெடியகற்றும் அமைப்பு - சில கருத்துக்களை தெரிவித்துள்ளது.

ஒரு பிரதேசத்தில் திடீரென இவ்வகையான தாவரங்கள் வளரும்போது, கால்நடைகள் அப்பிரதேசத்தை நோக்கிச்செல்ல முற்படலாம் எனவும், விலங்குகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் தெரிவித்துள்ளது.

மேலும் தற்போது கண்ணிவெடிகளை அற்றுவதற்கு ஏற்படும் செலவிலும் கூடுதலான செலவுசெய்ய நேரிடலாம் எனவும் தெரிவித்துள்ளது. மேலும் காற்று வெளியேறாத முறையில் தயாரிக்கப்பட்ட கண்ணிவெடிகளிலிருந்து நைதரசனீரொட்சைட்டு வெளியேறும் சாத்தியம் இல்லை எனவும், இதனால் இந்தத் தாவரங்களின்மீது நம்பிக்கை வைத்து ஓரிடத்தில் கண்ணிவெடிகளை அகற்றாது விடவேண்டிய சந்தர்ப்பம் நிகழலாமெனவும் ஹலோ ட்ரஸ்டின் அதிகாரி தெரிவித்தார்.

# வாரம் ஒரு யோகாசனம்

## தியானம்

பத்மாசனத்தில் உட்காரவும். சுத்தமான இடமாக இருக்க வேண்டும். கண்களை மூடிக்கொண்டு, நெற்றிப்புருவ மத்தியை மனக்கண்ணால் பார்க்கவேண்டும். புருவ மத்தியில் தேவனுடைய உருவத்தை அமைக்கவேண்டும். அந்தத் தேவனுடைய உருவத்தை மனதில் பதித்துக்கொண்டு பார்க்கவேண்டும். மனதில் எந்த கெட்ட எண்ணமும் இருக்கக்கூடாது. உடலை இறுக்கம் இல்லாமால் தளர்வாக நிலையில் சாதாரண மூச்சுக்கள் இருக்கவேண்டும். மனம் இப்படி இருப்பது தியானம் அல்ல. மனம் எங்கும் தாவாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். மனம் மான் ஓடுவதுபோல ஓடும். குரங்கு தாவுவது போல தாவும், வெள்ளாடு அங்கும் இங்கும் ஒவ்வொரு கடிகடிப்பதுபோல் மனம் சஞ்சலம் ஆகும். வயிற்றில் உணவு உட்கொண்டால் வயிற்றில் செமிக்கப் பட்டுக்கொண்டிருக்கும். அப் போது தியானம் செய்யக்கூடாது. வயிறு காலியாக இருக்கும்போதுதான் தியானம் செய்ய வேண்டும். தேவனுடைய உருவத்தை உற்று நோக்க வேண்டும். சக்தி உண்டாகும், ஆயுள் அதிகமாகும்.




தருபவர் - மா.மகாநேசன்.

### தியானத்தின் நன்மைகள்

ஞானம் ஏற்படும், போதனை உருவாகும். மனம் தூய்மையாகும். கர்ம பாவம் அழியும். கெட்ட சிந்தனை அழியும். புத்த பெருமான், யேசு கிறிஸ்து பெருமான், விவேகானந்த சுவாமிகள், பல முனிவர்கள் தியானத்தில் இருந்தார்கள். ஏன் கடவுளும்கூட தியானம் இருந்தார். மக்களை நன்நிலையாக்குவதற்குத்தான் தேவன் தன் இரத்தத்தால்கூட பாவத்தைக் களைந்தார்.

**புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி IV - சிவா**

# தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள்...

**1994** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி - பாரிஸ் நகரத்தின் புறநகர்ப் பகுதியான ஒபேவில்லியே பகுதியிலிருந்த மின்னியல் இலத்திரனியல் கருவிகளை உற்பத்தி செய்யும் ஒரு பிரபல நிறுவனத்தின் களஞ்சியப் பிரிவின் பொருள்காவும் லிப்டுக்குள், ஒரு இளைஞனின் சடலம் கண்டெடுக்கப் பட்டது.

இரவு 9 மணிக்கு மாரடைப்பால் உயிரிழந்த அந்த இளைஞனின் சடலம் - மறுநாள் காலை 8 மணிக்கே கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இளைஞனின் பெயர் பாலச்சந்திரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). வயது - 30.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இலங்கைத் தமிழன்.

இந்தத் தகவல் பாரிஸிலிருந்து வெளிவரும் 'லுபரிசியன்' பத்திரிகையில் வெளிவந்த போது, நான் அந்த இளைஞனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன்.

பாலச்சந்திரனுக்கு அப்பா இல்லை. அம்மாவும், அவனைவிட 2 வயது மூத்த அக்காவும், இரண்டு தம்பிகளும் இருந்தனர். தங்களுக்கென்று தந்தைவழிச் சொத்தாக இருந்த தோட்டக்காணியை விற்று, அந்தப் பணத்திலேயே அவன் 1990 ஆம் ஆண்டு பாரிஸுக்குச் சென்றான்.

30 வயதை எட்டும் தனது அக்காவுக்குத் திருமணம் செய்துவைக்கவேண்டும் என்பதே அவனது குறிக்கோள்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நல்ல, அறிதலுள்ள ஒரு உயர் அதிகாரி - பிரான்ஸின் அகதிகள் திணைக்களத்தில் இருந்ததால், நம்மவர்கள் நிறையப்பேருக்குச் சுலபமாக அகதி அந்தஸ்து கிடைத்தது. அவ்வாறு அகதி அந்தஸ்து பெற்றவர்களில் பாலச்சந்திரனும் ஒருவன். அவனுக்குத் தெரிந்த ஊர் பொடியளோடு சேர்ந்து, பாரிஸ் - லாகூர் நெவ் பகுதியில், ஒரு அறையில் தங்கியிருந்தான்.

அவ்வாறு தங்குவதற்கு சாப்பாடு உட்பட, மாதக் கொடுப்பனவு 1000 பிராங். நண்பர்களின் உதவியால், பாரிஸ் நகரத்திலுள்ள பிரபல உணவுவிடுதி ஒன்றில் புளோன்ஸர் (கோப்பை கழுவுதல்) வேலை கிடைத்தது. மாதம் 4700 பிராங் சம்பளம்.

அதில் 1700 பிராங்குகளைமட்டும் தனக்காக எடுத்துக்கொண்டு, மாதம் 3000 பிராங் பணத்தை அக்காவின் திருமணத்துக்கு சேர்ப்பதற்காக அம்மாவுக்கு மாதம் மாதம் அனுப்பி வைத்தான்.

அம்மாவும் அதை ஆடம்பரமாக வீண் செலவுசெய்யாமல், மகளின் திருமணத்துக்காகச் சேமித்து வந்தார்.

1992 ஆம் ஆண்டிலிருந்து அவனது அக்காவுக்கான திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. அந்தக் கட்டத்தில் அவனது அம்மா- இவன் அனுப்பிய பணத்தை சேமித்த வகையில் 3 லட்சம் ரூபா வைத்திருந்தார்.

ஆனால், சாதாரண மாப்பிள்ளைக்கே 5 இலட்சம் 6 இலட்சம் சீதனம் கேட்டதால், பல பேச்சுவார்த்தைகள் சீதனத்தால் குழம்பி விட்டன.

1993 ஆம் ஆண்டு ஒரு உறவுக்கார மாப்பிள்ளை சரிப்பட்டு வந்தது. ஆசிரியரான அந்த மாப்பிள்ளைக்கு 4 இலட்சம் ரூபா சீதனம் கேட்டார்கள்.

1994 ஆம் ஆண்டு தை மாதம் அந்தப் பணத்தைக் கொடுக்கலாம் என்று சொல்லி, திருமணமும் நிச்சயிக்கப்பட்டது.

ஆனால், அதன்பின்னர் மாப்பிள்ளை வீட்டுக்காரர் - மாப்பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும், தங்கைமாருக்குச் சீதனம் கொடுக்கவேண்டும் என்று கூறி; சீதனத் தொகையை 6 இலட்சமாக உயர்த்திவிட்டனர்.

பெண்ணின் அம்மா - கணவனை இழந்த தன்னால், அவ்வளவு தொகையைத் தரமுடியாது என்றும், நிச்சயிக்கப்பட்ட தனது மகளின் திருமணம் நின்றுபோனால், அவளது எதிர்காலம் பாழாகிப்போய்விடும் என்றும் - காலில் விழாக் குறையாக மாப்பிள்ளை வீட்டாரிடம் கெஞ்சிப் பார்த்தார்.

ஆனால் அவர்கள் - மகன் வெளிநாட்டில் இருக்கிறான்தானே. வாங்கித் தரலாமே என்று, தயவுதாட்சண்யமில்லாமல் சொல்லி விட்டார்கள்.

பிரான்ஸிலிருந்த பாலச்சந்திரனுக்கு - அம்மா இந்த விடயத்தைச் சொன்னபோது, முதலில் அவன் ஆடிப்போய்விட்டாலும், அக்காவை எப்படியும் வாழவைக்கவேண்டும் என்பதற்காக, தான் பணம் அனுப்புவதாகவும், திருமணத்தை நிறுத்தவேண்டாம் என்றும் சொன்னான்.

கையில் காசு வந்தால்தான் கழுத்திலை தாலி என்று, மாப்பிள்ளை வீட்டுக்காரர் சொல்லிவிட, தை மாதம் நடக்கவிருந்த திருமணம் - 1993 ஆம் ஆண்டு ஆவணி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அக்காவின் திருமணத்துக்குப் பணம் சேர்ப்பதற்காக, அவன் மாலைநேர வேலை ஒன்றைச் செய்ய ஆரம்பித்தான். பெரிய இலத்திரனியல் நிறுவனம் ஒன்றின் கழிவுகளை அகற்றுவதுதான் அந்தவேலை.

12 மாடிகளைக் கொண்ட அந்த நிறுவனத்தின் 9, 10, 11, 12 ஆம் மாடிகளின் கழிவுப் பொருட்களை (கடதாசிகள், கணினிப் பொருட்கள், இலத்திரனியல் பொருட் கழிவுகள் என்பன) 5 அடி x 5 அடி x 4 அடி கொள்ளவுள்ள ஒரு பெரிய பிளாஸ்ரிக் பெட்டியில் போட்டு, மின் உந்தியின் உதவியோடு தள்ளிச்சென்று, மின் ஏணி (லிப்ட்)யின் வழியாக தளப்பகுதிக்கு இறக்கி, அங்கிருக்கும் மிகப் பெரிய கழிவுக் கொள்கலனுக்குள் கொட்ட வேண்டும்.

இதனைச் சொல்லும்போது, இது சாதாரண ஒரு வேலையாகத் தோன்றினாலும், நடை முறையில் இது சரியான கஷ்டமான வேலை யாகும்.

5x5x4 அடி கனவளவுள்ள இந்தப் பெட்டிக்குள் போடப்படும் இலத்திரனியல் குப்பையின் நிறை - சிலசமயங்களில் 200, 300 கிலோவைக்கூட எட்டும்.

பாலச்சந்திரன் இயல்பாகவே பலவீனமான தோற்றம் உடையவன். உணவுவிடுதியில் கழுவும் வேலை என்பது, ஒரு நிமிடம்கூட ஓய்வில்லாத, உடலை முறிக்கும் வேலை. குப்பை அகற்றும் வேலையும் அப்படித்தான். முதல்வேலைக்கு ஒரு செ.ஃவ் (அதிகாரி) இருந்து வேலை வாங்குவார்.

◆

*(தொடரும்...)*

**உளவியல்** — கு.கணேசநாதன், வருகை விரிவுரையாளர், முகாமைத்துவம்.

# அழுத்த முகாமைத்துவம்

## Stress management

மனதைக் களைப்படையச் செய்யும் ஒரு சிறு நிலைமையையே அழுத்தம் அல்லது தகைப்பு எனலாம்.

இவ்வழுத்தமானது திறனற்ற தொடர்பாடலினாலும், செயற்பாடுகளின் மிகையினாலும் திறனற்ற பங்குபற்றுநர்களினாலும், பொறுப்பின்மையாலும், நேரவிரயத்தினாலும், யதார்த்தமற்ற நிலையினாலும், திறனற்ற ஒழுங்கமைப்பினாலும் தோன்றுகின்றன.

இவ்வழுத்த நிலையினை அனுபவசாலிகளினதும், ஆசான்களினதும், வழிகாட்டுநர்களினதும் உதவியினைப்பெற்று முகாமைசெய்ய முடியும்.

தியானம், ஆலோசனைபெறல், வழிகாட்டுதலைப் பின்பற்றுதல் என்பவற்றின் மூலமும் பயனுள்ளவகையில் அழுத்தத்தினை முகாமை செய்யலாம்.

தியானம், ஆலோசனை, வழிகாட்டல் என்பன உணர்வுபூர்வமாகப் பின்பற்றப்படுவதுடன், திறனுடையவர்களினால் இவை வழிப்படுத்தப் படவேண்டும்.

### அழுத்தத்திற்கான காரணிகள்.

- புதிய செயற்பாடுகள், புதிய தொழில்நுட்பம், புதிய கட்டுப்பாடு.
- புதிய சகபாடிகள், புதிய அமைவிடம்.
- சாத்தியமற்ற கால அவகாசம், சாத்தியமற்ற செயற்பாடுகள்.
- அளவுக்கு மிஞ்சிய பணப்பிரயோகம்.
- செயற்பாடுகளின் மிகை அல்லது குறை நிலை.
- தேவைக்கதிகமான தன்மை.
- களுத்தறுப்புப் போட்டிகள்.
- பிரிவு அல்லது உறவு முறிவுகள்.
- உறைவிட மாற்றம் அல்லது அமைவிட மாற்றம்.
- செல்லப்பிராணிகளின் இழப்பு.
- பரீட்சைத்தோல்வி.

### அழுத்தத்திற்கான உடல், மனவெழுச்சி, நடத்தை தொடர்பான அறிகுறிகள், உடல் ரீதியான அறிகுறிகள்.

- சீரற்ற இதயத்தடிப்பு.
- நெஞ்சிறுக்கம்.
- அடிவயிற்றுநோ அல்லது வயிற்றுழைவு.
- அடிக்கடி சிறுநீர்கழித்தல்.
- பாலியல் உந்துகைக் குறைவு.
- மூட்டுவலி.
- தசைப்பிடிப்பு, தோள்வலி.
- தலையிடி - நெற்றியில் ஆரம்பித்து தலை முழுவதும் பரவுதல்.
- தோல் வருத்தங்கள்.
- தொண்டையில் கழலை போன்ற உணர்வு.
- இரட்டை விம்பம் (பார்வைக் குறைபாடு).

### மனவெழுச்சி தொடர்பான அறிகுறிகள்.

- விரைவான மனநிலைச் சுழற்சி.
- தேவையற்ற கவலை.
- ஏனையோர் மீது இரக்கமின்மை.
- தேவைககதிகமாக உடல் நலனில் அக்கறை செலுத்துதல்.
- பின்வாங்குதல்.
- கெட்ட கனவுகள்.
- எரிச்சல்நிலை.

### நடத்தைரீதியான அறிகுறிகள்.

- நியாயமற்ற குற்றச்சாட்டுக்கள்.
- வரவு ஒழுங்கீனம்.
- குணமடைதலில் தாமதம்.
- கவனக்குறைவு அல்லது அலட்சியம்.
- தொழிற்திறன் வீழ்ச்சி, ஏளனம் செய்தல்.
- புகைத்தல், மது அருந்தல்.
- மருந்துப்பாவனை, அல்லது மருந்துப் பாவனை அதிகரித்தல்.
- மிகையான அல்லது குறைவான உணவை உட்கொள்ளுதல்.
- பதட்டமான மனநிலை.
- நித்திரையின்மை.
- பெறுபேற்று வீழ்ச்சி.

### பௌதீகச் சூழலினால் ஏற்படும் அழுத்தங்கள

- சத்தம் அல்லது இரைச்சல்.
- போதிய வெளிச்சமின்மை.
- மனதை நெரிடும் அதிர்வுகள்.
- காற்றோட்ட வசதியின்மை.

### அமைப்புரீதியிலான அழுத்தங்கள்.

- பொறுப்புக்களிற்கேற்ப அதிகாரம் இன்மை.
- செயற்பாட்டுக்குழுக்களின் பொருத்தப்பாடற்ற தன்மையும், அங்கத்துவமும்.
- நிலையற்ற மாற்றமுறும் கொள்கைகளும், நடத்தைகளும்.
- எழுந்தமான எதிர்வு கூறமுடியாத மாற்றங்கள்.
- தீர்மானம் மேற்கொள்வதற்கு தகவல் போதாமை.
- இலக்குகளிலும் எதிர்பார்ப்புக்களிலும் முரண்பாடுகள்.
- குறைவான அல்லது மிகையான அல்லது திருத்தமற்ற தகவல்கள்.
- அதிக மேலதிகாரிகள்.
- மட்டுப்படுத்தப்பட்ட சமூகத்தொடர்பு.
- மேலதிகாரிகளினால் புறக்கணிக்கப்படுதல்.
- திருப்தியற்ற மேற்பார்வை.

### செயற்பாடு அல்லது இலக்குரீதியான அழுத்தங்கள்

- மிகையான இலக்கு அல்லது மிகையான செயற்பாடு.
- தெளிவற்ற நோக்கம்.
- முரண்பாடுடைய இலக்குகள்.
- வளப்பற்றாக்குறை அல்லது வளப் பொருத்தப்பாடின்மை.
- இயந்திர உபகரணங்களின் பற்றாக்குறை.
- மீண்டும் மீண்டும் பின்பற்றப்படும் தேவையற்ற செயற்பாடுகள்.
- குறைவான ஆற்றல் பிரயோகம்.
- கடுமையான வெளியகக் கட்டுப்பாட்டு முறைமைகள்.

### தனிப்பட்ட அழுத்தங்கள்.

- பொருத்தமற்ற அறிவு, திறன்
- மாற்றத்தினை ஏற்றல் அல்லது மாற்றத்துடன் இணைதல் தொடர்பான திறன் குறைவு.
- அதிகுறுக்கீடுகள், அதிக நிச்சயமற்ற தன்மை.
- தரமான ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பினை வேண்டிநிற்றல்.
- ஏனையோரது ஒத்துழைப்புப் பற்றாக்குறை.
- வழமையான வேலைக்குப்புறம்பான மேலதிக வேலையினால் தோன்றும் அழுத்தங்கள்.
- பிரதிபண்ணல் திறனின்மை.

### மாற்றங்களின்போது அழுத்தங்களை முகாமை செய்தல்

- ஒரே நேரத்தில் பலவிடயங்களை மாற்றுதலைத் தவிர்த்தல்.
- விரைவாகப் பொருத்தப்பாடடையும் திறனை விருத்தி செய்தல்.
- செயற்பாடுகளை போதிய காலஅவகாசம் எடுத்து மேற்கொள்ளுதல்.
- செயற்பாடுகளில் ஈடுபாடு, சுயக்கட்டுப்பாடு, விழிப்புணர்வு என்பவற்றுடன் செயற்படல்.
- படிப்படியான உயர்வு அல்லது முன்னேற்றம்.
- சாத்தியப் பரிசீலனையும் தகுந்த திட்டமிடலும்.
- வளங்களின் உத்தம பயன்பாடும் இயலளவு பிரயோகமும்.
- செயற்பாடுகளில் குறைபாடுகளுக்கான காரணங்களை இனங்கண்டு சீர்செய்தல்.
- குறுகிய திறனுடைய குழுக்களில் தனிப்பட்டவர்களிலும் தங்கியிருப்பதை தவிர்த்தல்.
- தீர்மானமெடுத்தலிலும், இணைந்து செயற்படுதலிலும் - திறனையும் ஆற்றலையும் விருத்திசெய்தல்.
- உணர்வுகள், கஷ்டங்கள், சந்தேகங்கள், என்பவை தொடர்பாக மனந்திறந்து கலந்துரையாடல்.

### அழுத்தத்தையும், அதன் அறிகுறிகளையும் முகாமை செய்தல்.

- சுயகனவான் தன்மையினைப் பேணுதல்.
- நாளொன்றுக்குப் பத்து மணித்தியாலங்களுக்கு அதிகமாக வேலை செய்யாமை.
- வாரமொன்றிற்கு 1 1/2 நாட்களுக்குப் புறம்பான ஓய்வு.
- வருடத்தில் ஒரு முறை திட்டமிட்ட ஓய்வு.
- ஒவ்வொரு போசனத்தின்போதும் 30 நிமிட நேரங்களைச் செலவிடல்.
- ஆறுதலாக மென்று உணவினை உட்கொள்ளல்.
- சமநிலை உணவுப்பரிசீலனை.
- மனதுக்கு ரம்மியமான இசையினை கிரமமாகச் செவிமடுத்தல்.
- தளர்வுநிலை, அல்லது தியானநிலையினை நாளொன்றுக்கு இருமுறை பேணிக் கொள்ளல்.
- இடையூறு அற்ற இடத்தெரிவு.
- சுத்தமான காற்றோட்டமான இடத்தில் தினமும் 10 நிமிட உடற்பயிற்சி.
- போட்டியற்ற பொழுதுபோக்கு. (பூந்தோட்டம், ஓவியம், கவிதை)
- தளர்வான நடைப்பயிற்சி.
- இன்முகத்துடனும், நட்புணர்வுடனும் ஏனையோரை அணுகுதல்.
- ஏனையோரை மாற்ற முயற்சிப்பதை விட, தங்களை மாற்றிக்கொள்ளுதல்.
- ஏனையோருக்கு உதவுதலும் ஏனையோரது உதவிகளை ஏற்றலும்.
- உள்ளக்கிளர்ச்சிகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெறல்.
- தொழில் அதிருப்தி காணப்படின், திருப்திகரமான தொழிலை நாடுதல்.
- பழைய விடயங்களை மறந்து புதியவற்றில் ஈடுபடல்.
- தயக்கமின்றி உணர்வுகளை வெளிப்படுத்தல்.
- அடுத்த இலக்கை ஆரம்பிக்க முன்னர் முந்திய இலக்கினை பூரணப்படுத்தல்.
- சாத்தியமற்ற கால அவகாசங்களைத் தவிர்த்தல்.
- வழமையான நாளாந்த நடவடிக்கைகளை இடைக்கிடை மாற்றுதல்.
- சுய நன்றி தெரிவிப்பும், வெற்றிகரமான செயல நிறைவேற்றமும்.
- முடியாததென்பதிலும் இயலாதென்பதனை பொருத்தமாக வெளிப்படுத்தல்.
- பிறரது பெறுபேறுகளை ஏற்றலும், அங்கீகரித்தலும்.

நன்றி - ஆக்கம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதுஇலார்*
*உண்மை நிலக்குப் பொறை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிங்கள மக்களின் சமாதான விருப்பை இனம் காட்டப் போகும் தேர்தல்

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளநிலையில், தேர்தலுக்கான முன்னோடி பிரசார நடவடிக்கைகளுக்கான தளங்களை ஒவ்வொரு அரசியறகட்சியும் கிடைக்கும் ஊடகவாய்ப்புக்களை, மேடைகளைப் பயன்படுத்தி உருவாக்கத்தொடங்கியுள்ளன.

திடீரென ஒரு நள்ளிரவுப்பொழுதில் ஆட்சி கலைக்கப்பட்டுள்ளபோதிலும், தேர்தல் குறித்த எதர்பார்ப்பு, கடந்த இருமாதங்களாகவே அனைவர் மனதிலும் மெல்ல மெலல கருக்கொள்ளத் தொடங்கி வளர்ந்து வந்துள்ளதை எவராலும் நிராகரிக்கவே முடியாது.

'நான் எனது அதிகாரங்களில் 75 சதவீதமானவற்றை இன்னும் பயன்படுத்தவே இல்லை' என என்றைக்கு ஜனாதிபதி சந்திரிகா ஒரு சர்வாதிகாரியின் தொனியில் உரத்துறைக்க ஆரம்பித்தாரோ அன்றைக்கே ரணில் தலைமையிலான அரசின் எதிர்காலம் குறித்த தீர்ப்பினை சந்திரிகா எழுதிவைத்துவிட்டார் என்றே கூறவேண்டும்.

இப்போது அந்தத்தீர்ப்பு வாசிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுவிட்டது. அதனையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் சூழல், அரசியற கட்சிகளின் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நிலையைத் தோற்றுவித்துள்ளன.

ஒவ்வொரு கட்சியின் தலைமையும், தேர்தல் தொடர்பான தமது கருத்துக்களை, திருப்தியை, அதிருப்தியை, மற்றும் எதிர்ப்பினை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

முதலாவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஆட்சியை கலைத்து தேர்தலுக்கு நாட்குறித்ததன் மூலம் ஜனாதிபதி, 'பிரபாகரனுக்கு ஈழத்தை வழங்கும் திட்டத்தை முறியடித்து விட்டார்' - என்று தெரிவித்துள்ளார்.

இவரது இந்தகருத்தொன்று போதும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி இனவாதத்தின் தளத்தில் நின்றே தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றது என்பதை உணர்த்துவதற்கு,

ஏதோ ஈழம் என்பது ரணிலின் வீட்டில் இருக்கும் ஒரு பொருள் போலவும், அது சிங்கள மக்களின் சொத்து போலவும், அதனை ரணில் தாம்பாளத்தில் வைத்து பிரபாகரனிடம் கையளிக்கத் தயாராக இருந்தார் என்பது போலவும் ராஜபக்ஷ பிதற்றியுள்ளார்.

இதன்மூலம், சந்திரிகா ஈழம்பிரிந்துபோவதை தடுத்துவிட்டார் என்ற பொய்மைக்கருத்தை இனவாதத்தொனியில் ராஜபக்ஷ பேரினவாத சிந்தனையாளர்களுக்கு பரப்ப முயன்றுள்ளார் என்பதே உண்மையாகும்.

அதுமட்டுமல்லாது, இலங்கையை புதியதொரு காலனித்துவ நாடாக மாற்றுவதற்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசு திட்டமிட்டிருந்ததாகவும் குறிப்பிட்டதன் மூலம், சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேயையும், அதற்கு ஆதரவாகச் செயற்பட்ட ஏனைய சர்வதேச சமூகத்தையுமே அவர் காலனி ஆதிக்க சக்திகளாக இனம் காட்ட முயன்றுள்ளார் என்பது வெளிச்சமாகியுள்ளது.

இது இன்றைய சமாதான நடவடிக்கைகளின் மீது சிறிலங்கா சுந்திரக்கட்சிக்கு இருக்கும் எதிர்ப்புணர்வை துல்லியமாகக்கியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன், புதிதாகக் கூட்டணியை ஏற்படுத்தியுள்ள ஜே.வி.பியின் தலைவராக, தற்போது தலைமறைவு வாழ்வை விட்டு, லண்டனிலிருந்து வந்து இங்கு பிரசன்னமாகி இருக்கும் சோமவன்ஸ அமரசிங்க, புலிகளின் இடைக்கால யோசனையை எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும், முன்னர் சிலவருடங்களின் முன் சுதந்திரக்கட்சியால் ஏற்றுக்கொள்ளப்படட அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளையும் ஜே.வி.பி நிராகரித்து விட்டுள்ளது என்றும் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளதன் மூலம், இன்றைய சமாதான சூழலுக்கான அடித்தளமாகவுள்ள அனைத்தையும் ஜே.வி.பி எதிர்க்கிறது என்ற உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன், அவர் நேரடியாகவே கடந்த ஏப்ரலின் பின்னர், சமாதான முயற்சிகள் செயலிழந்து போய்விட்டன என்றும் பிரகடனம் செய்துள்ளார். இதேபோல், சமாதானத்தை எல்லா வகையிலும் எதிர்க்கும் கட்சிகள அனைத்தும் - புதிய கூட்டணியில் இணைந்து செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளதானதும், ஏற்கனவே இரண்டும்கெட்டான் நிலையில் இருந்த இடது சாரிகளும், இவர்களுடன் வேறு வழியின்றி ஒட்டிக் கொள்ளப் போவதாக தெரியவந்துள்ளமையும் இந்தத் தேர்தல் சமாதானம் குறித்த ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பாக - கருத்துக் கணிப்பாகவே - இருக்கப்போகின்றது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

இந்தநிலையில், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி என்ன முடிவை எடுக்கப்போகின்றது. சமாதானம் குறித்த தனது உறுதிநிலையை வெளிப்படுத்தி, பகிரங்கமாகவே தேர்தலில் தன்னை இனங்காட்டுமா? அல்லது பேரினவாதிகளையும் சமாளிக்க ஏதாவது மாற்றுயோசனைகளையும் முன்வைத்து இரட்டைவேடம் போடுமா?

எதுவானாலும் - சிங்கள மக்கள் இன்றைய சமாதான முன்னெடுப்பினை ஆதரிப்பவர்களாக, அமைதியை விரும்புவர்களாக, தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான, நிலையான தீர்வை வழங்குவதில் விருப்புடனும், ஆத்மசுத்தியுடனும் உள்ளார்களா என்பதை இந்தத் தேர்தல் இனம் காட்டும் என்பதே அரசியல் அவதானிகளின் எதிர்பார்ப்பாகும்.

## நாடும் நடப்பும்




# நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் அரசியல் நிலையை மேலும் சிக்கலாக்கும்

### கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்

நாடாளுமன்ற கலைப்பு ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பொதுத்தேர்தலும், தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வாக அமையப்போவதில்லை. மாறாக நாட்டின் அரசியற்சூழ்நிலையை மேலும் மோசமாக்கிவிடும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் எம்.பியுமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனிக்கிழமை நள்ளிரவு நாடாளுமன்றத்தைக் கலைத்தார். புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறும் என்றும் அறிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்டபோதே, கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமோ, ஜே.வி.பியிடமோ எவ்வித உறுதியான கொள்கையும் அறவேகிடையாது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றமை பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இரு துருவங்களாகச் செயற்பட்டு வந்ததனால், தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சாத்தியமாகமாட்டாது. ஜனாதிபதியும் - பிரதமரும் சமரச அரசியல் நல்லிணக்கப்பாட்டிற்கு வரினும்கூட, தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல்ரீதியில் தீர்வுகிடைக்கப் போவதில்லை. ஏனெனில், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது மாத்திரமே சிங்களத் தலைமைகளின் நோக்கமாகும்.

எந்தவொரு சிங்கள அரசியல் கட்சிகளும், தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிவைத்து, தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியில் நிரந்தரத்தீர்வு காணப் போவதில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். இடம்பெறவிருக்கும் பொதுத்தேர்தலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் 25 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படக்கூடும் என்று சிங்கள தீவிரவாத சக்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக தலைமைத்துவத்தின் கீழ் மாத்திரம் தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டு, இலங்கைத்தமிழர்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் உருவாகும் என்றால் மிகையல்ல. வடக்கு - கிழக்குத் தமிழர்களின் விடுதலை வேட்கையை இலட்சியமாகக் கொண்டே தமிழ் அரசியற்கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என்றார்.

# இராணுவ அதிகாரிகளுடான சந்திப்பில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளவில்லை

### விளக்கம் கோருகிறது கண்காணிப்புக்குழு

யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் ஒழுங்குசெய்யப்பட்ட படை அதிகாரிகளுடனான உயர்மட்டச் சந்திப்பில் புலிகள் கலந்து கொள்ளாததற்கான காரணங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு, புலிகளிடம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கேட்டுள்ளது.

இது தொடர்பாகப் போர்நிறுத்தகண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அகனஸ் பிறகடோட்ரயர் கருத்து வெளியிடுகையில்,

படையதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று புலிகள் அறிவித்துள்ளதையடுத்து - இந்தச் சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டது.

யாழ்ப்பாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவிருந்தார். இவர் இந்தச் சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குக் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புலிகளிடம் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கான காரணங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு கேட்டு, கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறையை அவதானிக்க சர்வதேச அவதானிப்பாளர்கள்

எதிர்வரும் தேர்தல் நியாயபூர்வமாக நடைபெறுவதற்கு, மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நடவடிக்கைகளுக்கு துணைசெய்யும் விதத்தில் கட்சித் தலைமைகளையும், பொலிஸ் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே நியாயபூர்வமாக தேர்தல் நடைபெறவேண்டிய தேவை குறித்து கொள்கைப் பிரகடனம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

எனினும், சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட்ட போதிலும், அதன் தலைவர் நியமிக்கப்படாமையால் - சுயாதீன ஆணைக்குழு சிறப்புறச் செயற்படமுடியாமல் உள்ளது.

இந்த நிலையில், மனித உரிமைகளை மீறாத அளவில் தேர்தல்கள் நடைபெறுவதற்கு, இந்தத் தலைவர்களைச் சந்திக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

# மேலும் பல அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளை இழப்பர்

மேலும் பல அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவிகளை இழக்கவிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைதிரிபால சிறிசேன தெரிவித்தார்.

மின்னேரியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சரத்குமார ஒழுங்குசெய்த - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விவசாயிகள் சங்கம் மற்றும் மீனவர் அமைப்பு ஆகியவற்றின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டபோதே மைதிரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்-

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி - விவசாயிகளுக்குப் பெரியளவிலான நன்மைகளைச் செய்யப்போவதாக வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. ஆனால், சிறியளவிலான வாக்குறுதிகளே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதாகக் கூறிக் கொண்டு, புலிகளின் தாளத்துக்கேற்ப அரசாங்கம் நடனமாடியது. இதனாலேயே, ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்து, நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்.

அமைச்சரவையில் சமூகம் அளிக்காத அமைச்சர்களும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் பயன்படுத்திவரும் அரசாங்க வாகனங்களை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும் மைதிரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

சந்திப்புக்களம் பகுதி - II

- மேகதூதன்

# சர்வதேச ஒழுங்குடன் இணைவதில் ஆங்கிலமொழி அறிவு அவசியமானது



(07.02.2004 இன் தொடர்ச்சி...)

**கேள்வி:** ***தொடர்பு சாதனங்கள் பற்றிக் குறிப்பிட்டீர்கள் அபிவிருத்தியில் அவற்றின் பங்களிப்பு எவ்வாறானதாக இருக்கவேண்டும்.***

பதில்: ஒரு நாட்டில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய சக்தியும் வலிமையும் தொடர்பு சாதனங்களுக்கு உண்டு. அவை தேசப்பற்றினூடாக பல அபிவிருத்திக்கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஆக்கங்களை வெளியிடலாம். எமது பிரதேசப் பத்திரிகைகள், தமிழ் மொழிமூல வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள், கணினி இணையம், திரைப்படங்கள் என்பவை எல்லாம் பொழுதுபோக்கு என்ற அம்சத்திற்கு மேலாக பல சேவைகளை ஆற்றவேண்டும். எமது பிரதேச அபிவிருத்தியில் இவற்றின் சேவைகள் போதுமானதாக இல்லை. மேலும் இன்றைய உலகக்கல்வி - அறிவியல் செல்நெறிகளில் தொலைத்தொடர்பு சாதனங்கள், விமர்சனப்பாங்கான, சமூக ஒடுக்குமுறைகளையும் அபிவிருத்தி நோக்கிய புதிய ஆக்கங்களையும் வெளியிடுகின்றன. இந்நிலை வளர்ச்சியை நாமும் பின்பற்றவேண்டும். நூல் - சஞ்சிகை வெளியீடு தொடர்பாகவும் நாம் பின்னிற்கின்றோம். எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களை வாங்கி ஊக்குவிக்கும் கலாசாரம் முறையாக வளர்க்கப்படவில்லை. அரசாங்க ரீதியாகக் கூட அவர்களுக்குக் கிடைக்கும் ஆதரவு போதாமல் உளளது. சுயவழிப்படுத்தப்பட்ட 'கற்கக் கற்றல்' தேர்ச்சியை மாணவர்கள் வாசிப்பின்றிப் பெறாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

**கேள்வி:** ***நீங்கள் வெளியீடுகள் பற்றிக் கூறினீர்கள். இலங்கைத் தீவில் தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு அரசாங்கம் வெளியிடும் நூல்களைவிட பாடவிடயங்கள் தொடர்பான ஆதார, துணைப்பாட நூல்கள் என்பனவும் அவசியமானவை இவற்றின் வெளியீடும் போதுமானதாக இல்லையே.***

பதில்: நீங்கள் போதுமானதாக இல்லை என்கின்றீர்கள் நான் கூறுகின்றேன் இல்லை என்று. தமிழ் மொழி மூலம் துணைப்பாட நூல்களுக்குப் பதிலாக பரீட்சைகளை நோக்கமாகக் கொண்ட பலவகைப் பயிற்சி நூல்களே வியாபார நோக்கில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் சிங்கள மொழி மூல நூல்கள் பெருமளவிற்குத் தரமாக வெளிவருகின்றன. அங்குள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் மிகச் சிறந்த துணைப்பாடநூல்களை விஞ்ஞானம், கணிதம், தாய்மொழி, சமூகக்கல்வி, ஆரம்பக்கல்வி, தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் மாணவர்கல்வி அபிவிருத்திக்கு உகந்த நூல்களை எழுதி வெளியிடுகின்றனர். க.பொ.த உயர்தரப்பாடங்கள் தொடர்பான பல அபிவிருத்திச் செயலமர்வுகள் ஒவ்வொரு பாடரீதியாகப் பாடசாலை மாணவர்க்கும் பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு துறைகளும் வழிகாட்டும் நிகழ்ச் சித்திட்டங்களை மிகச சிறப்பாகச் சேவை அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றன. இலங்கைத் தீவில் சிங்கள மொழிமூல கல்வி நிலையுடன் ஒப்பிட்டு ஆராயும்போது தமிழர்களாகிய நாம் மிக மோசமாகப் பின் தங்கியிருக்கின்றோம்.

**கேள்வி:** ***ஒட்டுமொத்தமாகத் தமிழ்மொழி மூலக்கல்வியின் பின்னடைவு பற்றிக் கூறினீர்கள். இதற்கான காரணங்கள், தீர்வுகள் எவையாக இருக்கவேண்டும்?***

பதில்: இன்றைய கல்வி நிர்வாக அமைப்புகளில் மத்திய- மாகாணக் கல்வி அமைச்சுக்கள், பரீட்சைத் திணைக்களம், கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக் கழகங் களில் தமிழ்மொழிக்கல்வி ஒரு மொழிபெயர்ப்புக் கலாசாரத்தினூடு அழிந்து - அழிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் அதிகாரிகள், கல்வியலாளர்களின் பிரதிநிதித்துவம் போதாதநிலை, மேலும், தமிழ்மொழி மேம்பாட்டிற்கு அவர்களின் பங்களிப்பின்மைகள், வினைத்திறனுடன் செயற்படுவதிலுள்ள தடைகள், இருப்பவர்களும் வருடம் தோறும் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தமிழ் மொழிதின விழாவொன்றே நாம் செய்யும் பெரும் தமிழ்த்தொண்டு என எண்ணும் எண்ணங்கள் இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளைக் கண்டறிந்து, தீர்வுகளை விரைவாகக் காணவேண்டியுள்ளது. இதற்குத் தமிழ் கல்வியியலாளர்களின் ஆய்வு அமைப்பு (A Study Of Tamil Academic Community ) அனைவரின் முயற்சியுடனும் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாக மிகத் தீவிரமாகச் செயற்பட வேண்டியுள்ளது. உலகில் எந்தவொரு நாடும் தாய் மொழியை விருத்திசெய்யாமல் விடுதலையடைந்ததில்லை. தாய்மொழியூடான கல்வியே தேசப்பற்றையும் சமூகப்பற்றையும் ஏற்படுத்தவல்லது. உலகளாவிய ரீதியில் இன்னும் இருநூறு வருடங்களில் உலகில் பேசப்படும் நூறு வகை மொழிகள் அழிந்துவிடும் பட்டியலில் தமிழ் மொழியும் உள்ளது. இது ஐ.நா. கல்வி கலாசார அமைய ஆய்வு வெளியீட்டுத்தகவல் இந்நிலையில் தாய்மொழியூடான கல்வி உலகக் கல்விச் செயல்நெறிகளில் இன்று மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது.

**கேள்வி:** ***இந்நிலையில் சர்வதேச மொழியான ஆங்கில மொழி மூலமான கல்வி இடைநிலை வகுப்புகளில் வசதியுள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல் பற்றித் தங்கள் கருத்து என்ன?***

பதில்: கல்வியில் சமவாய்ப்பு என்ற தேசியக்கொள்கை கேள்விக்குரியதாகிய நிலையில் சர்வதேசப் பாடசாலைகள், ஆங்கில மொழி மூலப் பாடசாலைகள், சமூகக்கட்டமைப்பில் வசதிகூடிய பணக்கார மாணவர்கள் 20 சதவீதத்தினர் பயன்பெறும் வகையில் உள்ளன. ஆரம்பம் - இடைநிலை - உயர் கல்வியில் ஆங்கிலம் ஒரு பாடமாக சேர்க்கப்பட்டும் அதன் பெறுபேறுகளின் வீழ்ச்சி காரணமாக அப்பிரச்சினையைத் தீர்க்க ஆங்கில மொழி மூலமான கல்வியை அறிமுகப்படுத்தியமை தவறு. ஆங்கிலப் பாடத்தினை எல்லாப் பாடசாலைகளிலும் வளங்களையும், வசதிகளையும் முறையாக ஏற்படுத்திக்கொடுத்தல் புதிய செயற்திட்டங்களை முறையாக அமுல்படுத்தினால் போதும். சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் எமது எல்லா மாணவர்களுக்கும் தேர்ச்சியை வழங்கலாம். தற்போது ஆங்கிலம், பிரஞ்சு, யப்பானின் சீனமொழி எனப் பன்மொழி ஆற்றல் எமது மாணவர்களுக்குத் தேவை. முக்கியமாக உலக நீரோட்டத்துடன் இணைந்து பணியாற்ற ஆங்கில மொழி மிகமிக அவசியம். இதை எல்லா மாணவர்களுக்கும் வழங்க விசேட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆனால், அதற்காக ஆங்கில மொழிமூலம் ஏனைய பாடங்களையும் கற்கவேண்டும் என்பது தவறு. நவீன கல்வி - மொழி- உளவியலறிஞர்கள் தாய்மொழி மூலம் கற்கும் மாணவனே மிக உயர்ந்த திறன்களையும் மனப்பாங்குகளையும் பெறுவான் எனத் தமது ஆய்வுகளில் நிரூபித்துள்ளார்கள். யப்பான், பிரான்சு, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தாய் மொழிக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன. எமது மாணவர்கள் அந்நியமயமாகிப்போவதற்கு இதுவும் காரணமாகலாம். இன - மொழி ரீதியாக

> **சமகால கல்வி, சமூக வாழ்வு, நிலைமைகள தொடர்பாக - கல்வியியலாளரும், யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதியுமான பா.தனபாலனுடனான சந்திப்பு**

விடுதலை வேண்டிநிற்கும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் தாய்மொழி - தமிழ்மொழி விருத்தி- நடைமுறைப்படுத்தல், அடிப்படை மொழித்திறன்களைக் கற்பிக்கும் மிக நவீன கற்பித்தல் முறைகள் அறிமுகமாகியுள்ளன. ஆனால், எமது பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களும், தமிழில் பல்கலைக்கழகத்தில் விசேடமாகத் கற்றுப் பட்டம் பெற்ற ஆசிரியர்களும் எழுத்துப்பிழை - சொற்பிழை - வசனப்பிழை - என மிக மோசமான நிலையிருப்பதை என்னவென்று சொல்ல? முதலில் எமது தாய் மொழி நடைமுறைகள் அபிவிருத்தி தொடர்பாக நாம் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. அதனைத் தொடர்ந்து சர்வதேச• மொழியான ஆங்கிலத்தில் கவனம் செலுத்தலாம். அதற்காக ஆங்கிலம் அவசியமில்லை என்பது பொருள் அல்ல. எனவே மொழியியல் தொடர்பான விசேட பயிற்சிகளை எமது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்க வேண்டும்.

**கேள்வி:** ***இன்றைய ஆசிரியர்கள் பற்றிப் பல விதமான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றனவே, இது பற்றிய தங்கள் கருத்து?***

பதில்: இன்றைய சமகாலச் சூழ்நிலையில் ஆசிரியர் பற்றிய விமர்சனங்கள் அதிகமாகியுள்ளன. இதற்குத் காரணம் ஆசிரியர்களிடமிருந்து சமூகம் பலவற்றை எதிர்பார்ப்பதேயாகும். உலகிலுள்ள எந்த நாட்டினதும் இனத்தினதும் முன்னோடிகளாக, வழிகாட்டிகளாகக் கணிக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள். ஓர் இனத்தின் - தேசத்தின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் ஆசிரியர்களுடைய செயல்கள் முக்கியம் பெறுகின்றன. உலகின் பலநாட்டு விடுதலைப் போராட்டங்களில் ஆசிரியர்கள் முக்கிய பங்கை வகித்துள்ளனர். சிறப்பாக மலேசிய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் பிரதான வெள்ளோட்டமாகக் காணப்பட்டவர்களும் ஆசிரியர்களே உண்மையாகவும், நேர்மையாகவும் தேசப்பற்றிலும் சமூகப் பற்றிலும் கவனம் செலுத்து வழிகாட்டிகளாக ஆசிரியர்களாலேயே முடியும். இவ்வகையில் ஆசிரியர்களுடைய பொறுப்பு மிகக் கனதியானது. எனவேதான் சமூகத்தின் அனைத்துக் கண்களும் ஆசிரியர்களையே நோக்கிய வண்ணம் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் கொச்சைப்படுத்தப்படும் நிலை இன்று மேலோங்கி வருகின்றது. இது கல்வி வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். இதைத்தடுக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

**கேள்வி:** ***தாங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்விக்கும் தர மேம்பாட்டுக்கும் பொறுப்பான உப பீடாதிபதியாக உள்ளீர்கள். அவ்வகையில் இன்றைய நவீன ஆசிரியர் கல்வி பற்றிய கருத்துக்கள் ஏதும் உண்டா?***

பதில்: ஆம், இன்றைய மிக நவீன உலகளாவிய கல்விச் செல் நெறிகளிலே ஆசிரியர் - மாணவர்களின் உயிர்த்துடிப்பான செயன் முறைகள் இடைவினைகளுடாகவே கற்றல் நிகழும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையில் இன்றைய நவீன ஆசிரியர் கல்வி வழிகாட்டலில் ஆலோசனைத்துறை, கல்வி உளவியல், சமூகவியல், எதிர்காலவியல், தகவல் தொழில் நுட்பத்துறைகள் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் நவீன கற்றல் - கற்பித்தல் தொழில் நுட்பச் சாதனங்கள், களப் பயிற்சிகளில் ஆசிரியர்கள் மேற்கொள்ளும், வகிக்கும் பங்கு, அர்பணிப்பு என்பவற்றுடன், ஆசிரியர் தொடருறுக் கல்வி என்ற வகையில் தொடர்ச்சியாக ஆசிரியர் வாண்மையை உயர்த்தும் பயில்வுகள் வழங்கப்படுதல் முக்கியம் பெறுகின்றன. தமது உயர்கல்வியை விருத்தியாக்க அவர்களுக்கு பரந்த சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல் அவசியம். ☆

## பார்வைகள்... பதிவுகள்... பகிர்வுகள்...

### ஒரிஜினல் ஜப்பானை தேடுபவர்களே...

ஒரு தமிழர் கலைக்குழு ஒன்று வடபகுதியில் இருந்து ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தது. கலைநிகழ்ச்சிகளை அது நடத்தியது. அதன்பிறகு தமக்குத் தேவையான இலத்திரனியல் பொருட்களை வாங்குவதற்கு அது அலைந்து திரிந்தது. அதில் ஒருவர் தனக்கான இலத்திரனியல் பொருட்களை நுனுக்கமாகப் பார்த்துப் பார்த்து ஜப்பான் தயாரிப்பு இல்லையென நிராகரித்தார்.

அன்பளிப்பாகப் பலர் கொடுத்த சிறந்த பொருட்களைக்கூட அது ஜப்பான் தயாரிப்பு இல்லை. தாய்வான் சீன தயாரிப்புக்கள் என அவற்றையும் நிராகரித்தார்.

எங்களவரில் சிலருக்கு இன்னமும் ஒரிஜினல் ஜப்பான், இங்கிலண்ட் மாயை அகலவில்லை. புதிதாக ஜப்பான், இங்கிலண்ட் இல்லை என்பதற்காகவே பழைய ஜப்பானையும் இங்கிலண்டையும் கட்டிக்காத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நண்பர்களுக்காக சிலவிடயங்களைத் தரலாம் என நினைக்கின்றேன்.

ஜப்பான் ஒரு உயர்தரமான நாடு. அங்கு எல்லாமே விலை அதிகம். சாதாரணமாக அரை லீற்றர் கனிம (மினரல்) நீரின்விலை 300 யென் (இலங்கை ரூபா 240) ஒருதேனீர் 300 யென். ஒரு பணிஸ் 290 யென். இப்படியாகவே போக்குவரத்துச் செலவும் ஒரு கிலோமீற்றருக்கு 1000 யென் (800 ரூபா). இப்படியான அத்தியாவசியப் பொருட்கள், சேவைக்குரிய பெறுமதியே ஜப்பானில் இப்படித்தான். தொலைபேசிக் கட்டணம் எனில் - 1000 யென்னில் இலங்கைக்கு ஐந்து நிமிடமே கதைக்கலாம். செல்லிடத் தொலைபேசி எனின் வெளிச்செல்லவும் - உள்வரவும் ஒரேயளவு கட்டணமே. இப்படி அடிப்படை விடயச்செலவே இந்த நிலையில் உள்ளது.

இந்தச் செலவு ஜப்பானியருக்கு ஒரு பொருட்டல்ல. ஏனெனில் இதற்கேற்பவே அங்கு சம்பளங்கள். சாதாரண குறைந்த பட்சச் சம்பளமே 10 லட்சம் யென்களுக்கு மேல் (17 லட்சம் ரூபாவுக்கு மேல்). அங்குள்ள பண நிலைமை இப்படி. அங்கு உற்பத்திச் செலவு எம்மைப் பொறுத்தவரை மிக மிக அதிகம். இந்த உற்பத்திச் செலவில் உற்பத்தியாகும் பொருட்களை நாம் கொள்வனவு செய்வதெனில் ஒரு சில கோடீஸ்வரர்களாலேயே அது முடியும்.

ஜப்பானைப் பொறுத்தவரை தன்னுடைய உள்ளகப் பொருளாதார நிலையை மாற்றினால் மட்டுமே தன்னாட்டு உற்பத்திகளை சந்தைப்படுத்தமுடியும். அதற்குத் தயாராக இல்லாத நிலையில் அது கூலி குறைந்த நாடுகளுக்குத் தனது தொழிற்சாலைகளை நகர்த்தத் தொடங்கியது. Sony, National, Samsung, Akai, Honda, Yamaha, Suzuki, Kawazaki, Toyota, Nissan, Mitsubushi உள்ளிட்ட சகல நிறுவனங்களும் தம் உற்பத்தி மையங்களை கூலி குறைந்த தாய்வான், சீனா, தென்கொரியா, தாய்லாந்து, மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு நகர்த்தியது. அங்கிருந்தே ஜப்பானிய நிறுவனங்கள் தம் உற்பத்திப் பொருட்களை ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா ஆகிய சகல நாடுகளுக்கும் அனுப்புகின்றன. அங்கு ஜப்பானிய நிறுவனங்களின் உற்பத்திகள் அது உற்பத்தியான நாட்டின் பெயருடன் வருகின்றன. மேற்குலக நாடுகளின் (இங்கிலண்ட், ஜேர்மன்) உற்பத்திகளும் கூலிகுறைந்த ஆசிய நாடுகளுக்கே தளம்மாறிவிட்டன.

ஒரிஜினல் தேடுபவர்கள் இனி Made in Japan, Made in England களைப் பெறமுடியாது. அப்படிப் பெறுவதானால், அவர்கள் ஜப்பானியர்கயாகவோ இங்கிலாந்தினர்களாகவோ மாறவேண்டும்.

இன்று ஜப்பானியப் பொருட்கள் Under Licensed Japan Sony Corporation என்பதாகவே வாங்கலாம். ★

– திரு.த.திரு

## ஒரு கடிதம்...

# நொத்தாரிசுமார்களின் திரிசங்கு சுவர்க்க நிலை

காணி உறுதிகளுக்கு முத்திரை வரி அறவிடுவது தொடர்பாகப் பலரும் பலவிதமாக பத்திரிகைகள் வாயிலாக கருத்துத் தெரிவித்துள்ளமையால், எது சரி எதுபிழை என்று முடிவெடுக்கமுடியாத நிலையில் நொத்தாரிசுமார்களும் பொதுமக்களும் தட்டுத்தடுமாறுகின்றனர். அறுதி, நன்கொடை, சீதனம் இம் மூன்றுவகை உறுதிகளைத் தவிர மற்றவை யாவற்றிற்கும் 2001.05.01 தொடக்கம் முத்திரை வரி நீக்கப்பட்டுள்ள விடயம் பரகசியமானதொன்று மேற்கூறிய மூன்று தன்மையான உறுதிகளுக்கும் முத்திரை வரி அறவிடப்படவேண்டிய அவசியம் இல்லை என, பொறுப்புவாய்ந்த எந்தவொரு அதிபரோ, மேலதிகாரியோ, மேல் உத்தியோகத்தரோ செயலாளரோ இதுவரை திட்டவட்டமாக அறிக்கையிடாத காரணத்தால், நொத்தாரிசுமார்கள் திரிசங்கு சுவர்க்க நிலையில் இருந்துகொணடு பின்வரும் நாலுவகையில் செயற்படுவது கண்கூடு.

இதனை ஆரோக்கியமான செயல் என்று எவரும் கருதமாட்டார்கள்.

**01) கண்டிப்பாக முத்திரை கட்டணம் அறவீடுசெய்து முத்திரைகளை ஒட்டிப் பாரம் கொடுப்பவர்கள் ஒரு சாரார்.**

**02) முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யாமலும், முத்திரைகள் ஒட்டாமலும் பாரம் கொடுப்பவர்கள் ஒருசாரார்.**

**03) முத்திரைக் கட்டணம் செலுத்துபவரிடமிருந்து மட்டும் கட்டணம் அறவீடுசெய்து அத்தகையவர்களின் உறுதிகளில் முத்திரைகள் ஒட்டியும், செலுத்தாதவர்களின் உறுதி களில் முத்திரைகள் ஒட்டாமலும் காணிப் பதிவகத்துக்கு சமர்ப்பிப்பவர்கள் பிறிதொரு சாரார்.**

**04) முத்திரைக் கட்டணம் அறவீடு செய்துவிட்டு முத்திரைகள் ஒட்டாமல் சமர்ப்பிப்பவர்கள் மற்றொரு சாரார்.**

இவை யாவற்றையும் ஏற்றுப் பதிவுமேற்கொண்டு திருப்பி ஒப்படைக்கின்றது காணிப்பதிவகம்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் 'வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முத்திரைவரி அறவிடுவது சட்ட அங்கீகாரத்துக்கு முரணானது- அப்பாற்பட்டது' என்று கூறுவதும் "சட்டமா அதிபரும், இறைவரி ஆணையாளரும், பதிவாளர் நாயகமும், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முத்திரை வரி அறிவிடச் சட்ட ஏற்பாடுகள் இல்லையெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்" என்று அடித்துக் கூறுவதும் வேடிக்கையானவையே.

மறுவளமாக நோக்குமிடத்து முத்திரை வரி அறவிடச் சட்ட ஏற்பாடுகள் இல்லையென்ற கூற்று உண்மையானால், சம்மந்தப்பட்ட காணிப் பதிவகங்கள் முத்திரை வரியை அறவிடுவது எங்ஙனம் பொருந்தும்- சாலும் என்ற கேள்வி எழுவது இயற்கையானது; நியாயத்தின் பாற்பட்டது.

முத்திரை வரி அறவிடுவது சட்ட பூர்வமானதல்ல என ஆணித்தரமாக அடித்துச் சொல்லுபவர்கள் அத்தகைய கூற்றுக்களை ஆதார பூர்வமாக ஊர்ஜிதஞ்செய்து வைப்பார்களாயின் மக்களின் சந்தேகத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும்.

எனவே, அறிக்கை விடுபவர்கள் கருத்துத் தெரிவிப்பவர்கள், ஆதார பூர்வமாக அவற்றை ஊர்ஜிதஞ் செய்யாவிட்டால் பொது மக்கள் திசை திருப்பப்படுவதற்கும் தவறான வழியில் இட்டுச்செல்லப்படுவதற்கும் அது கால்கோளாக அமையுமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ✸

பிரசித்த நொத்தாரிசு
மு.சே.இராசையா



ஹெய்ட்டியில் துறைமுகமொன்றிலிருந்து பொதுமக்கள் பொருட்களைக் களவாடிச் செல லும் காட்சி

உலக நோக்கு

# கஞ்சா வரியை வசூலிப்பதில் ஆப்கானிஸ்தானில் மோதல்!

## இதுவரை 20 பேர்வரை பலி!!

(காபூல்)

ஆப்காகானிஸ்தானில் இருதரப்பு அதிகாரிகளுக்கு இடையிலான சண்டையில் 20 பேர்வரை பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நடந்த சண்டையால் அங்கு உணவுப்பயிர்கள் எதுவும் பயிரிடப்படவில்லை. அந்தநாடு பெரும் பாலும் தீவிரவாதிகளின் கையில் இருந்ததால் அவர்கள் கஞ்சாவைப் பயிரிட்டு, மற்ற நாடுகளுக்குக் கடத்தி அதன்மூலம் வரும் பணத்தில் ஆயுதங்களை வாங்கிக்குவித்தனர்.

சமீபத்தில் அமெரிக்கப் படையெடுப்பால் அங்கு தலிபான் ஆட்சி வீழத்தப்பட்டு - ஹமீத் ஹர்சாய் தலைமையில் ஆட்சி நடக்கிறது. 12 ஆயிரம் வெளிநாட்டுப் படையினர் பாதுகாப்புப் பணியில் அங்கு ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் பதக்ஷான் மாகாணம் ஆட்கோ மாவட் டத்தில் கஞ்சாப் பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுவருகின்றன.

இதற்கான வரியை யார் வசூலிப்பது என்பதில் இரண்டு மாவட்ட அதிகாாிகளுக்கடையே கடந்தவாரம் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் தொடர்கதையாகிவிட்டது. இதுவரை இந்தச் சண்டையில் 20 பேர்வரை பலியாகியுள்ளனர். 40 பேர்வரை படுகாயமடைந்துள்ளனர்.

போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் இப்பகுதி மக்கள் வேறி டங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். பதக்ஷான் மாகாண தலைநகரில் உள்ள பாதுகாப்புப்படையினரில் 100 பேர் ஆர்கோ மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

உள்ளூர் மாவட்ட அரசுமீது தங்களுக்கு நம்பிக்கையில்லை. மத் திய அரசு உள்ளூர் நிர்வாகத்தைக் கவனிக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் வற்புறுத்திவருகின்றனர். கடந்த ஓகஸ்ட் மாதம்முதல் இங்கு நடக்கும் வன்முறையில் 550 பேர்வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## துருக்கி பூமியதிர்ச்சி

# இறந்த உடல்களுக்கிடையே இருந்து மேலுமொரு பெண் உயிருடன் மீட்பு!



துருக்கியில் கொன்யா என்ற இடத்தில் இறந்த மனிதர்களின் உடல்களின் மத்தியிலிருந்து பெண் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

சென்றவாரம் துருக்கியில் நடைபெற்ற நிலநடுக்கத்தில் 11 மாடிக்கட்டடம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 80 பேர்வரை கொல் லப்பட்டிருந்தார்கள். இதனிடையே நேற்று முன் தினம் 16 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரு டன் மீட்கப்பட்டிருந்தான்.

மீட்புப்பணியாளர்கள் மோப்ப நாய்களுடன் மீட்புப் பணியினைத் தொடர்ந்து நடத்திய போது - மனித உடல்களின் மத்தியில் சிக்கி யிருந்த 24 வயதுடைய யசிமின் யப்றாக்சி என்ற பெண்ணொருவர் மீட்கப்பட்டார்.

தண்ணீர் என்ற ஒலியைக்கேட்டு அந்த இடத்தை மீட்புப்பணியாளர்கள் நன்கு ஆராய்ந்த போது அந்தப்பெண் களைப்படைந்து காணப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பெண் அதிகம் களைப்படைந்து காணப் பட்டதாகவும், ஆனால், மிகவும் பாதிக்கப்பட வில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலநடுக்கம் ஏற்படாத நிலையிலும் கட் டடங்கள் சரிந்து விழக்கூடிய நிலையில் காணப் படுவதாகவும் இது தொடர்பாக இரு கட்டட ஒப்பந்தகாரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

# வடகொரியாவின் 6 மில்லியன் மக்களுக்கு ஏப்ரல் மாதம்வரை நிவாரணம் இல்லை

## ஐ.நா.உலக உணவு அதிகாரிகள் தெரிவிப்பு



(பியாங்யொங்)

வடகொரியாவில் 6 மில்லியனுக்கு மேற் பட்ட மக்களுக்கு அடுத்த ஏப்ரல் மாதம்வரை உணவு நிவாரணங்கள் எவையும் கிடைக்க மாட்டாதென ஐக்கிய நாடுகளின் உலக உண வுத் திட்டத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் அடுத்த இரு மாதங்களுக்கு 100,000 மக்களுக்கு குறிப்பாக வைத்தியசா லைகள், அனாதை இல்லங்களில் வாழ்பவர்க ளுக்கு மாத்திரமே உணவு - பங்கீட்டு முறை யில் விநியோகிக்கப்படவுள்ளது.

வடகொரியாவில் குளிர்காலத்தில் இவ்வகை யான உணவுப் பங்கீட்டுமுறை செயற்படுத்தப்படு கின்றது.

கடந்த 9 ஆண்டுகளாக இவ்வகையான உணவுப்பற்றாக்குறை நீடித்துவருவதாகவும்- இதற்கு வெப்ப அதிகரிப்பு, தவறான பொருளா தார முகாமைத்துவம், ரஷ்யாவின் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில் ஏற்பட்டுள்ள தடை ஆகியன காரணமாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் உதவி வழங்கும் நாடுகளை முடிந் தளவு விரைவாக உதவிகளை வழங்குமாறு உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதி மசூட் கைடெர் கேட்டுள்ளார்.

அண்மையில் வடகொரியாவில் அமுல் படுத்தப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங் கள் விவசாயிகளுக்குப் பாதிப்புக்களை ஏற் படுத்தியுள்ளதாகவும் கைடெர் மேலும் தெரி வித்தார்.

மேலும் வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களும் உணவுக் கட்டுப்பாட்டுக்குக் காரணமென பி.பி.ஸியின் லொயுசியா சலிம் தெரிவித்தார்.

இதனிடையே ரஷ்யாவும் வேறு சில நாடுக ளும் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. ஆனால், அவை ஏபரல் மாதத தின் பிற்பகுதியிலேயே கிடைக்கும் எனத் தெரி விக்கப்படுகின்றது.

# இஸ்ரேலினால் அமைக்கப்பட்ட தடுப்புச்சுவர் சட்டத்திற்கு முரணென நீதிமன்றில் முறையீடு

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் அமைந்துள்ள மனித உரிமை அமைப் பொன்று - இஸ்ரேல் அரசினால் மேற்குக்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர் சட்டத் திற்கு முரணானதென தெரிவித்து இஸ்ரேல் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த முறைப் பாட்டை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றம் ஆராய வுள்ளது.

இந்தத் தடுப்புச்சுவர் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத் தில் அமைக்கப்பட்டுள்ளதென மனித உரிமை அமைப்பு தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியர்களினால் அமைக்கப்பட்டுள்ள இத் தடுப்புச்சுவர் சர்வதேச சட்டத்திற்கு முரணானது என் பதை விரைவில் சர்வதேச நீதிமன்றம் விசாரிக்கவுள் ளது.

இத்தடுப்புச்சுவர் மூலம் பலஸ்தீன குண்டுதாரிகளின் பிரவேசத்தைத் தடுக்க முடியுமென இஸ்ரேல் தெரி வித்துள்ளது. ஆனால், தமது பிரதேசத்தை ஆக்கிர மித்து பலஸ்தீனர்களுக்கான ஒரு சுதந்திரநாடு உரு வாகுவதை இஸ்ரேல் தடுக்க முற்படுகிறது என பலஸ்தீ னர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தற்போது 480 மைல்கள் நீளமான இத் தடுப்புச்சுவர் பலஸ்தீனியர்கள் வாழும் பிரதேசங்களூடாக ஊடறுத் துச் செல்வதால் பலஸ்தீன மக்களின் இயல்புவாழ்வை அதிகளவில் இது பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதனிடையே கோக்கில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் பெப்ரவரி 23 இல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே, தடுப்புச்சுவரில் சில மாற்றங்களைச் செய்வதற்கு உத்தேசித்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித் துள்ளது. தடுப்புச்சுவரின் நீளத்தை 62 மைல்களாகக் குறைக்கவுள்ளதாகவும், குறிப்பாக பலஸ்தீன மக்கள் வாழும் பிரதேசங்களின் வெளிப்புறமாகத் தடுப்புச் சுவரை மாற்றியமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தது.

பாதுகாப்புச் சுவரில் ஏற்படுத்தவுள்ள மாற்றங்களை, விரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவதற்கு திட்டமிட்டுள்ள அதிகாரிகளுக்குக் காண்பிக்கவுள்ள தாகவும் பிரதமர் ஏரியல் ஷரோனின் ஆலோசகர் சல்மன் சொவல் தெரிவித்தார்.



# பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் பூகம்பம் தாக்கிய பகுதிக்கு விஜயம்



(தெஹ்ரான்)

ஈரானில் சென்ற ஆண்டு பூமி அதிர்ச்சியி னால் பாதிக்கப்பட்ட 'பாம்' நகருக்கு பிரித்தா னிய இளவரசர் சாள்ஸ் விஜயமொன்றை மேற் கொண்டுள்ளார்.

33 ஆண்டுகளுக்கு. முன்னர், இளவரசர் பிலப்ஷ், இளவரசி 'ஆன்' னின் விஜயத்திற்குப் பின்னர் முதற்தடவையாக இளவரசர் சாள்ஸ்' இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

'பாம்' நகருக்கு விஜயம் மேற்கொள்வ தற்கு முன்னர் நேற்று ஈரானிய ஜனாதிபதி மொகமட் கதாமியை தெஹிரானில் சந்தித் தார். இதனிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈராக்கின், பஷ்ரர் .இற்கு விஜயம் செய்த சாள்ஸ் அங்கு கடமையாற்றும் பிரித்தானியப் படையினரை உற்சாகமூட்டியிருந்தார்.

இளவரசர் சாள்ஸ் - பிரித்தானிய செஞ் சிலுவைக் சங்கத்தின் ஆதரவாளராக உள் ளார். இதனால் பாழ் நகரில் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளை அறிந்து கொள்வ தில் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாக தெஹ் ரானில் அமைந்துள்ள பிரித்தானிய தூதுவ ராலயத்தின் அதிகாரியா்ன சுன்ரியூ தெரிவித் தார்.

இதனிடையே ஈராக்கிற்கான விஜயத்தின் போது சாள்ஸ் - அமெரிக்க அதிகாரியான போல் பிரீமரையும் சந்தித்தார். ஈராக்கிய போரில் பிரித்தானியாவின் பங்கினை பிரீமர்- சாள்ஸிடம் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கூட்டமைப்பு திருமலையில் ஆராய்வு!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் இணைந்து, நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நேற்று திருகோணமலையில் நடத்தின.

திருகோணமலை மத்திய வீதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் மண்டபத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் - ரெலோவின் திருமலை மாவட்ட அமைப்பாளர் லோகீஸ்வரன், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் சண்முகநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் ரகுநாதன், கூட்டணியின் சார்பில் இரா.சம்பந்தன், துரைரட்ணசிங்கம், ராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தி, இதன் மூலம் திருகோணமலையின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும், அதற்காக அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு, குறிக்கோளை முன்னெடுக்கவேண்டும்.

இவையே நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக இரா.சம்பந்தன் -'நமது ஈழநாட்டுக்குத்' தெரிவித்தார்.

இதேவேளை, இன்று மாலை 4 மணிக்கு கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் அனைவரும் கொழும்பில் சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்பின்னர் மாலை 5 மணிக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனை கொழும்பிலுள்ள கூட்டமைப்பு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

(04,10)


நாற்சந்தி

'வீடு கட்டமுன்னரே குடிபூரலுக்கும், பால் காய்ச்சவும் நாள் குறித்தானாம் ஒருத்தன்...'

'யார் அந்த ஒருத்தன்...? நொடி போடாமல் விளக்கமாகச் சொல்லன்...!'

'வேறை ஆர் அநுரா பண்டாரநாயக்காதான்... தேர்தலுக்கு வேட்புமனுவே தாக்கல் செய்யேல்லை... நேற்றுத்தான் அறிவிப்பே வெளியாகியிருக்கு... அதுக்குள்ள அடுத்த விவசாய அமைச்சர் விமல் வீரவன்ச என்று அறிவிச்சிட்டார் பாத்தியே... கனகண்ணை பாத்தியே அநுராவின்ரை எதிர்வுகூறல் திறனை...?'

'அவர் இதுவும் சொல்வார்... இன்னமும் சொல்வார் மணியம்... இதைச் சொன்னவர் தனக்கு எந்த அமைச்சுக் கிடைக்கும் என்று சொல்லேல்லை பாத்தியே...'

'அவர் இப்போது பிரதம மந்திரியாக தனக்குள்தானே பிரகடனம் செய்திருப்பார்... ஆனால் இதை வெளியிலை சொன்னால் விவகாரமாகிப் போம் என்று பேசாம இருக்கிறார்...'

'ஓமோம் அவருக்கு ஜனாதிபதிக் கதிரையிலும் ஒரு கண் இருக்கு... ஆனா அக்கா அதுக்கு விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை...!'

'மூன்று முக்கிய அமைச்சுக்கள் ஜே.வி.பிக்கு குடுக்கப்படும் எண்டும் அவர் கூறியிருக்கிறார் பாத்தியே...!'

'நிச்சயமா பாதுகாப்பு, நிதி, உள்துறை அமைச்சுக்களை சந்திரிகா ஒருத்தருக்கு குடுக்கவே மாட்டார்...'

'கொடுத்ததையே பறிக்கிறவர், பறிச்சதுகளை கொடுப்பாரே...!'

'நாற்காலிக் கனவுகளாலை நாடே நாசமாய் போகிறது... என்ன நான் சொன்னது சரிதானே...!'

தெருவாசி

# விவசாயிகளின் உண்ணாவிரதம் நேற்றுடன் கைவிடப்பட்டது!

விவசாயிகள் மேற்கொண்டுவந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது.

கொழும்பு ரயில்வே நிலையத்துக்கு முன்னால் கடந்த நான்கு நாட்களாக விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

யூரியா மற்றும் உரவகைகளின் விலைகள் குறைக்கப்படவேண்டும் எனக் கோரியே, இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

13 விவசாயிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவந்தனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்துள்ளது. இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அரசாங்கம் கலைக்கப்பட்டபோதும், அமைச்சரவை தொடர்ந்தும் இயங்குவதன் காரணமாக, அமைச்சரவையின் ஊடாகத் தமது பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்ற காரணத்தால் உண்ணாவிரதத்தை தொடர்ந்துவந்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவும், ஜனாதிபதியின் ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்கவும் விவசாயிகளைச் சந்தித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று கூட்டப்படுகின்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் - விவசாயிகள் பிரச்சினை பற்றிய தீர்க்கமான முடிவுகள் ஆராயப்படுமென விவசாயிகளுக்கு இவர்கள் உறுதியளித்தனர்.

இதனையடுத்து விவசாயிகள் தமது போராட்டத்தை நேற்றுடன் நிறுத்தினர்.

### சபாநாயகருக்கு பிரியாவிடை

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று சபாநாயகர் பதவியிலிருந்து பிரியாவிடை பெற்றார்.

நேற்று நாடாளுமன்றக் கட்டத்தில், இந்தப் பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சபாநாயகர் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்க்க நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர்

அரச சேவையில் தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2000 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபெறுகளின்படி கீழ்க்குறிப்பிடப்படும் பெயர்களை உடையவர்கள் இந்த மாதம் 14 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு கொழும்பு 7, சுதந்திர சதுக்கத்தின் அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சில் 6 ஆவது மாடியில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் தோற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்குரிய அழைப்புக் கடிதங்களை எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.செயலக நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

ரி.ஜீவன்ஜனா (கைதடி), எஸ்.சக்திராணி (கரவெட்டி), எம்.அமிர்தகுமாரி (கரவெட்டி), எஸ்.கிருபா (பருத்தித்துறை), எஸ்.சிவரஞ்சனி (சுழிபுரம்), பி.கோமதி (கோப்பாய்), ரி.மிர்னாளினி (கோப்பாய்), எஸ்.சுபாஜினி (கரவெட்டி), பி.இன்பவதனி (சுழிபுரம்), எம்.சிவராஜா (கோப்பாய்).

### பிரதிநிதிகளை...

தமை சட்டவிரோதமானது என்றும் விசேட மேன்முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சாசனத்தின் 17 ஆவது திருத்தச் சட்டத்துக்கேற்ப - சுதந்திர ஆணைக்குழுவிற்கான பிரதிநிதிகளை அரசியல் அமைப்புச்சபைக்குச் சிபார்சு செய்யும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உரியது என்று விசேட மேன்முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நெதர்லாந்து...

நிற்கான சர்வதேச உதவிகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

ஐரோப்பிய இராஜதந்திரிகளோடு நடத்தப்படும் இந்தப் பேச்சுவார்த்தை நம்பிக்கை தரும் வகையில் அமைந்துள்ளதாக, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர்கள்...

திபதி சந்திரிகாவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணைகளை நாடாளுமன்றில் கொண்டுவரத் திட்டமிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### குறுந்தூர...

இடம்பெற்றபோது அனைத்து வீதிகளும் மூடப்பட்டிருந்ததுடன், வீடுகளின் கதவுகளும் மூடப்பட்டிருந்தன.

இராணுவ வட்டாரங்கள் இது குறித்துத் தகவல் வெளியிடுகையில் - புலிகள் முதன்முறையாக 1995 ஆம் ஆண்டு விமானப்படைப் போக்குவரத்து விமானம்மீது ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியிருந்தனர்.

தரையிலிருந்து வானுக்கு ஏவும் 'சாம்' ஏவுகணைகளைப் பயன்படுத்தி புலிகள் வான் நடவடிக்கைகளை நிறுத்த முற்பட்டனர். புலிகள் இந்த ஏவுகணைகளை - ஆப்கானிஸ்தான், கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள கறுப்புச் சந்தைகளில் பெற்றனர்.

இதேவேளை, புலிகள் கடந்த மாதம் பரிசோதனைசெய்த குறுந்தூர ஏவுகணை வன்னியில் தயாரிக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து இதுவரை தமக்கு தகவலைத் திரட்டிக்கொள்ள முடியவில்லையென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### மருதானையில்...

ணத்தை பொலிஸாருக்குத் தெரிவிக்கவில்லை என்றும், இதனால், இவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான எஸ்.சிவபாலன், ரி.கிரிஷன், ஏ.ரமேஷ், அந்தோனிதாஸ் ஆகியோரே வாகனத்துடன் கைதுசெய்யப்பட்டதாகவும், அவர்கள் மீதான விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### ஐ.தே.முன்னணி...

இந்த தேர்தலில் அமைச்சர்களின் அதிகாரங்களும், வாகனங்களும் பயன்படுத்துவதை தடுக்கவே இந்த நடவடிக்கையை எடுக்க ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

தற்போது, ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள, அமைச்சரவை அந்தஸ்தில்லாத நூற்றுக்கும் அதிகமான அமைச்சர்கள் இருக்கின்றனர்.

இவர்கள் நிச்சயமாக இந்தத் தேர்தலில் உத்தியோகபூர்வ வாகனங்கள், அரசஊதியம் பெறும் அலுவலகர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியவற்றை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்துவார்கள்.

இது குறித்து எதிர்க்கட்சிகள் முறையிட்டதையடுத்தே அமைச்சர்களின் எண்ணிக்கையையும், அதிகாரங்களையும் குறைக்க ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

### கண்காணிப்புக்குழு...

அதன்பின் காலை 10.15 மணியளவில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை 22 ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பகல் 12 மணியளவில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவை அவரது காரியாலயத்தில் சந்தித்தார்.

மாலை கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் வசந்த விக்கிரமசிங்க மாவட்ட அரச அதிபர் காமினி றொட்றிக்கோவையும் சந்தித்தார்.

இதன்பின், விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தருமன் இருவரையும் மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இவரது திருமலை மாவட்ட விஜயம் தொடர்பாக, மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹெட்ஸ்பர் கருத்துத் தெரிவிக்கையில் -

கண்காணிப்புக்குழுத் தலைவராக ஹொவ்டே பொறுப்பேற்ற பின்னர், திருமலை மாவட்டத்திற்கு வந்து சகலரையும் சிநேகபூர்வமான முறையில் சந்தித்தார் எனவும், வேறு விசேட காரணங்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.

இன்று மட்டக்களப்பு செல்லும் ஹொவ்டே - அங்கு படையதிகாரிகள் மற்றும் புலிகள் உறுப்பினரைச் சந்திப்பதுடன், நாளை அம்பாறைக்கும் செல்லவுள்ளார்.

(04,10)

### நாடாளுமன்றத்தை ஜனாதிபதி...

நிலவும் வெறிபிடித்த அதிகாரப் போட்டியும், பகைமையும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதி வழங்க மறுக்கும் கடும்போக்கும் இலங்கையின் அரசியல் உறுதிநிலையை ஆழமாக ஆட்டங்காணச் செய்துள்ளது.

அத்தோடு, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கும், பாதுகாப்பான வாழ்வுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

சமாதானத்திலும், சமாதான வழிமுறையிலான தீர்விலும் தமக்கு ஆழமான, நேர்மையான பற்றுறுதி இருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் எவ்வித சந்தேகத்துக்கு இடமின்றி உலகத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

கொழும்பில் அரசியல் நெருக்கடியும், குழப்பநிலையும் நிலவியபோதும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை தொடர்ந்து இறுக்கமாக கடைப்பிடித்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக இருப்பார்கள்.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். இந்நிலையைக் கருத்திற்கொண்டு அவசர மனிதாபிமானத் தேவைகளை எதிர்நோக்கி நிற்கும் தமிழ் மக்களுக்கு உடனடியாக நிவாரண மற்றும் அவசர உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும், அரசியல் அபிலாஷைகளையும் அங்கீகரித்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வுகாண முன்வரும் அரசியல் சக்திகளுக்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

அத்துடன், தமிழ் மக்களுடன் சமாதானமாக, ஒற்றுமையாக ஐக்கியப்பட்டு வாழ்வதா, அல்லது தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து பிரிந்து சென்று தனியரசை அமைப்பதற்கு அவர்களை நிர்ப்பந்திப்பதா என்ற இறுதி முடிவை சிங்கள மக்கள்தான் இந்தத் தேர்தலில் முடிவெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
Uduvil Road, Maruthanarmadam, Jaffna.
T.P:- 0214 - 590222 E-mail:- etouch@wow.lk
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க புதிய சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.
- Certificate in JAVA
- Certificate in VISUAL BASIC
- Certificate in C/C++
{3 Months 1500 Only}
- Certificate in AUTOCAD (With Microsoft Visio designer)
நேரம்: 14.02.2004 மாலை 3.00 மணி
மேலதிக விபரங்களிற்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.
(606) Director

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.